# காலணி வீசும் 'சனாதன'க் காப்பு!

மகாராட்டிர மாநிலம் அமராவதியைச் சேர்ந்த பூ.இரா.கவாய் என்னும் பூசன் இராமகிருட்டின கவாய் இந்திய உச்சநயன் மன்றத்தின் நயனராக 2019 மே 24–அன்று அமர்த்தம் பெற்றார்; 2025 மே 14–அன்று உச்சநயன் மன்றத்தின் 52–ஆம் தலைமை நயனராக அமர்த்தம் பெற்றுக் கடமையாற்றி வருகிறார்.

கடந்த ஆறு ஆண்டுகளில், அரசியலமைப்புச் சட்டம், மேலாண்மைச் சட்டம், குடிமையியல் சட்டம், குற்றவியல் சட்டம், மின்சாரச் சட்டம், நடுவர் சட்டம், சுற்றுச்சூழல் சட்டம், கல்வித் தொடர்பானவை, வாணிக வழக்குகள் உள்ளிட்ட பல்வேறுநிலைச் சட்டங்களைக் கையாளுகின்ற ஏறத்தாழ 700 அமர்வுகளில் இடம்பெற்றிருந்தார். சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்துதல், குடிமக்களின் அடிப்படைஉரிமைகள் உள்ளிட்ட மாந்த உரிமைகளைப் பாதுகாத்தல் தொடர்பான பல்வேறு வழக்குகளின் தீர்ப்புகள், அரசியலமைப்பு அமர்வு தீர்ப்புகள் உட்பட சற்றேறக்குறைய 300 தீர்ப்புகளை எழுதியுள்ளார். 2025 நவம்பர் 23 – அன்று பணிநிறைவு செய்ய உள்ளார்.

உலான்பாதர் (மங்கோலியா), நியூயார்க்கு (அமெரிக்கா), கார்டிப்பு (பிரிட்டன்), நைரோபி (கென்னியா) ஆகிய இடங்களில் பல்வேறு அனைத்து நாட்டு மாநாடுகளில் கலந்துகொண்டிருக்கின்றார். கொலம்பியா பல்கலைக் கழகம், ஆர்வர்டு பல்கலைக்கழகம் உள்ளிட்ட பல்வேறு பல்கலைக் கழகங்களிலும், அமைப்புகளிலும் பல்வேறுபட்ட அரசியலமைப்பு, சுற்றுச்சூழல் சிக்கல்கள் குறித்துச் சொற்பொழிவுகளை நிகழ்த்தியிருக்கின்றார்.

*2025 அக்டோபர் 6 அன்று, இந்தியாவின் உயர் நயன் மன்றத்தின் நயன்மன்றம் –1 என்ற அறையில், தலைமை நயனர் கவாய் அவர்களின் மன்றத்தில், காலை 11.35 மணியளவில், வழக்காளர்களின் முன்னிலையில், வழக்குரைஞர் ஒருவர் தலைமை நயனர் மீது காலணி ஒன்றை வீச முயன்றார். அப்போது அவர் "சனாதனத்தை அவமானப் படுத்துவதைப் பொறுத்துக்கொள்ள மாட்டோம்" ("சனாதன் கா ஆப்மான் நகி சகேங்கே") என்று ஒலி எழுப்பினார். அந்த வழக்குரைஞரை உடனடியாகப் பாதுகாப்பு அதிகாரிகள் வெளியே கொண்டுசென்றனர்.*

*தலைமை நயனர் கவாய் அவர்கள் எவ்வகை அச்சமோ கோவமோ பரபரப்போ, பதற்றமோ இல்லாமல் அமைதியாகக், "கவனத்தைச் சிதறவிடாதீர்கள், இது எனக்குத் தாக்கம் ஏற்படுத்தாது" என்று கூறிவிட்டுத் தாம் கவனித்த வழக்கைத் தொடர்ந்தார். இதனை இந்தியச் சட்ட வட்டாரங்கள் "எடுத்துக்காட்டான நயன்துறை மனப்பாங்கு" (model judicial temperament) என்று பாராட்டின. 'நடந்து விட்ட செயல்' குறித்து உடன் இருந்தோர் சற்று நேரம் கழித்து நினைவூட்டிய வேளையில், தலைமை நயனர், 'அதை அப்போதே மறந்து விட்டேன்' என்று இயல்பாகச் சொல்லிவிட்டு நயன்மன்றப் பணியில் மூழ்கி விட்டார். அவர் நயன்மன்றப் பதிவாளரிடம், காலணி வீசியவர் மீது வழக்குத் தொடர வேண்டாம் என்றும் அறிவுறுத்தினார்.*

*நம் நாட்டு மக்களை மட்டுமல்லாமல், உலக மக்களையே அதிர்ச்சிக்குள்ளாக்கிய இந்த நிகழ்ச்சி நடைபெற்ற வேளையில், சிறிதளவும் பொறுமையை இழக்காமலும், பதற்றமடையாமலும் தனது பணியினைத் தொடர்ந்த நிலை, தலைமை நயனரின் முதிர்ச்சி பெற்ற பேருள்ளத்தை வெளிப்படுத்தியது. பிற நயனர்கள், மூத்த வழக்கறிஞர்கள், சட்ட மாணவர்கள் எனப் பலரும் அவரின் இந்த நடத்தை குறித்துப் பாராட்டினார்கள். உ. ந. மன்ற வழக்கறிஞர்*

மன்றத்தின் தலைவர், "அந்த நெருக்கடியான நேரத்தில் நயன் மன்றத்தின் பெருமிதத்தைக் காக்கும் வகையில் அவர் அமைதியாக நடந்துகொண்டார்" என்று கூறினார்.

தலைமை நயனர் மீது காலணியை வீச முயன்ற ஆள் தன்னறிவை இழந்துவிட்ட பித்துப்பிடித்த ஆளோ, தெருத்திரி மாந்தனோ, முதிர்ச்சியற்ற இளைஞனோ இல்லை. 71 அகவை நிரம்பிய உச்ச நயன் மன்றத்தின் மூத்த வழக்குரைஞர் என்பது வியப்பளிக்கும் உண்மையாகும்!

அரசமைப்புச் சட்டத்தின்படிப் பணியாற்றிய தலைமை நயனரை, அரசமைப்புச் சட்டத்திற்குப் புறம்பான, பிறப்பிலேயே வேறுபாடு கற்பிக்கின்ற ‘சனாதன’க் கோட்பாட்டின் வெறியுணர்வுடைய ஒருவர் தாக்கிட முயன்றுள்ளார். இது ஒரு தனியாள் செயல் இல்லை. இந்தச் செயலைப் புரிந்தவருக்குப் பின்னால் அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரான கொள்கையும், நம்பிக்கையும் உள்ளோர் உள்ளதை உணர இயலும் என்று நடுவுநிலையாளர் கருத்துரைக்கின்றனர்.

வழக்கறிஞர் அமைப்புகள், இந்த நிகழ்வு, "நயன் மன்றத்தின் மீதான நேரடித் தாக்குதல்" என்று கண்டித்துள்ளன. உ.ந.மன்ற வழக்கறிஞர் மன்றம் காலணி வீச முயன்ற வழக்குரைஞர் இராக்கேசு கிசோரின் உறுப்பினர் உரிமையை நீக்கம் செய்து உத்தரவிட்டுள்ளது.

தலைமை அமைச்சர் நரேந்திரமோடி, இத் தாக்குல் முயற்சி குறித்து எஃசு (X) தளத்தில் எழுதிய செய்தியில், "இந்தியத் தலைமை நயனர் பூ.இரா.கவாய் அவர்களுடன் பேசியுள்ளேன். இன்று காலை உச்சநயன் மன்ற வளாகத்தில் அவர்மீது நடந்த தாக்குதல் ஒவ்வொரு இந்தியரையும் கோவமடையச் செய்துள்ளது. இப்படிப்பட்டக் கீழ்மையான செயல்களுக்கு நம் குமுகத்தில் இடமில்லை. இது முழுமையாகக் கண்டிக்கத்தக்கது. இத்தகைய சூழ்நிலையிலும் நயனர்

கவாய் காட்டிய அமைதியை நான் பாராட்டுகிறேன். அது, நயன்மையின் விழுமியங்களிலும் நம்முடைய அரசியலமைப்பை வலுப்படுத்தும் உணர்விலும் அவருடைய உறுதிப்பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது" என்று கூறியுள்ளார்.

இந்திய ஒன்றிய அமைச்சர் இராமதாசு அத்துவாலே போன்றவர்கள், இது ஒடுக்கப்பட்ட குமுகத்தைச் சேர்ந்த நயனர் உயர்பதவிக்கு வந்ததை உயர்சாதியினர் ஏற்றுக்கொள்ளாததன் விளைவு என்றும், அதனால், பட்டியலினத்தவர், பழங்குடியினர் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

பதிவு செய்த உ.ந.மன்ற வழக்கறிஞர்கள் மன்றம் (SCAORA), பேராயக் கட்சி, தமிழக முதலமைச்சர் மு.க.இசுதாலின், கருநாடக முதல்வர் சித்தராமையா முதலியோரும் காலணி வீசிய நிகழ்ச்சிக்குக் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

பாதுகாப்பு அதிகாரிகளால் வெளியே கொண்டுசெல்லப்பட்ட அந்த வழக்குரைஞரை தில்லி காவல்துறை உசாவிய போது, 71 அகவையுடைய உச்ச நயன்மன்ற வழக்குரைஞராகிய அவர் பெயர் இராக்கேசு கிசோர் என்று கூறியிருக்கின்றார். 16–9–2025 அன்று உ. ந. மன்றத்தில் ‘மத்தியப் பிரதேச’ மாநிலம் காசுரகா கோயில் விட்டுணு சிலை புதுப்பிப்பு பற்றிய வழக்கில், தலைமை நயனர், ‘கடவுளை அவமதித்துப் பேசிவிட்டார்’ என்றும், ‘சனாதன’த்தைப் பற்றுடன் கடைப்பிடித்துவரும் அவரால் தலைமை நயனர் சொன்னதைப் பொறுத்துக்கொள்ள முடியாது’ என்றும் கூறியுள்ளார். காலணியை வீசிடும் முயற்சி செய்தது, அவருடைய செயல் இல்லை என்றும் கடவுள் செய்யுமாறு ஏவியபடி, காலணியைக் கழற்றி வீச முயன்றதாகவும் கூறியுள்ளார். மூன்று மணி நேர உசாவலுக்குப் பிறகு, அவரைக் காவல் துறையினர் போக விட்டிருக்கின்றனர்.

நடுவுநிலை அறிஞர்கள், இந் நிகழ்ச்சியை ஒரு தனிப்பட்ட தாக்குதலாக மட்டுமன்றி நயன் துறையின் மாண்பைக் குலைக்கின்ற, அவமதிக்கின்ற, செயலாகப் பார்க்கின்றனர். நயன்துறையின் உரிமைக்கும் நாட்டின் அரசியலமைப்பிற்கும் அச்சுறுத்தலாகவும் பார்க்கின்றனர். இத்தகைய வெறுப்புச் செயல்களுக்குத் தெளிவான விடையளிக்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் வலியுறுத்துகின்றனர்.

இன்னும் சிலர், சாதி சார்ந்த இழிவுபடுத்தலாகவும், ஓர் ஒடுக்கப்பட்ட பிரிவைச்சேர்ந்த தலைமை நயனர் மீதான தாக்குதலாகவும் பார்க்கின்றனர். தலைமை நயனர் பூ.இரா.கவாய் இந்தியாவின் ஒடுக்கப்பட்ட பிரிவைச் சேர்ந்த இரண்டாம் தலைமை நயனர் என்பதை நினைவூட்டுகின்றனர்.

காலணி வீசுவது என்பது இழிவுபடுத்தலின் உச்சமாகக் கருதப் படுவதால், இந் நிகழ்வு குறிவைத்து நடத்தப்பட்ட சாதி அடிப்படையிலான அவமதிப்பு என்று கருதப்படுகிறது. இச் செயல் பட்டியல் சாதிகள், பழங்குடியினர் வன்கொடுமைத் தடுப்புச் சட்டம், 1989–இன் கீழ் வரும் ஒரு செயலாகும் என்றும், இது பொது இடத்தில் ஒடுக்கப்பட்ட குமுகத்தைச் சேர்ந்த ஒருவரை அவமானப்படுத்த முனையும் நோக்குடன் செய்யப்பட்டது என்றும் வலியுறுத்துகின்றனர்.

வேறு சிலர், இந் நிகழ்வை நயன் துறையிலும் ‘சனாதன’க் கோட்பாடுகளைப் புகுத்த முயலும் பார்ப்பனிய மதவெறி ஆற்றல்களின் நேரடித் தாக்குதலாகப் பார்க்கின்றனர். நயன்துறையின் தனி உரிமையைக் குலைக்கும் முயற்சி என்பது மட்டுமின்றிச் சமன்மை, குமுக நயன்மை ஆகியவற்றிற்கு எதிரான ஒரு செயலாகவும் பார்க்கின்றனர்.

காசுரகா கோயில் சிலைகள் இந்தியத் தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன. சிதைவடைந்த விட்டுணு சிலையைப் புதுப்பித்து கோயிலுக்குள் வைப்பதற்கு நயன்மன்றம் உத்தரவிட முடியாது. இது முழுக்க முழுக்க விளம்பர நோக்கத்துடன் பதிவு செய்த வழக்கு என்று தலைமை நயனர் குறிப்பிட்டார். தொல்லியல் துறையினரை அணுகுங்கள் என்று கூறித் தனது அமர்விற்கு வந்த வழக்கினைத் தள்ளுபடி செய்தார். திரும்பதிரும்ப முறையீட்டாளர் சிலையைப் புதுப்பிப்பதற்கு உத்தரவிடக் கோரிய நிலையில், நீங்கள் நம்பிக்கை வைத்துள்ள விட்டுணுவிடமே கேட்டுப் பெறுங்கள் என்று சொல்ல நேர்ந்தது.

கோயிலில் உள்ள அந்தச் சிலை சிதைந்து விட்டது, புதியசிலை வைக்க வேண்டும் அல்லது சிதைந்த சிலையைப் புதுப்பிக்கவேண்டும் என்று அவர் கோயில் மேலாண்மையிடமோ, தொல்லியல் துறையிடமோ முறையிட வேண்டும், இல்லையேல், மாவட்டஆட்சியர் மூலம் முயற்சி செய்யலாம். நயன்துறையை நாட முடிவு செய்தாலும், உயர் நயன்மன்றம் சென்று தீர்ப்பு பெறலாம். அங்கும் ஞாயம் கிடைக்க வில்லை என்றால் தான் உச்ச நயன் மன்றத்தை அணுகி இருக்க வேண்டும். ஆனால், இவர் நேராக உச்ச நயன் மன்றம் சென்றது சரியில்லை. தொல்லியல் துறை ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது. ஒன்றிய அரசாட்சியில் இருப்பது ‘சனாதன’த்தைப் போற்றும், காக்கத் துடிக்கும் ஆட்சியாளர்கள் தாமே! ஏன் இவர் அதை நாடவில்லை? காரணம், இவர் நோக்கம் விட்டுணு சிலை சீரமைப்பு இல்லை! கவாய் தான்! ஒடுக்கப்பட்டோரிலிருந்து இரண்டாம் முறை ஒருவர் உயர் பதவிக்கு வந்ததைப் பொறுக்க முடியவில்லை என்ற விளக்கமும் தரப்படுகின்றது.

"இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை நடைமுறைப் படுத்தக்கூடிய இடத்தில், ஒருசாராரின் மத நம்பிக்கைகள், மத

வழக்கங்கள், மூட நம்பிக்கைகள் அடிப்படையில் மட்டுமே இனி உச்ச நயன் மன்ற வளாகங்கள் செயல்பட வேண்டுமென்றும், அவற்றின் அடிப்படையில் மட்டுமே தீர்ப்புகள் வழங்கப்பட வேண்டுமென்றும், அவற்றிற்கு மாறாக இந்தியக் குற்றத் தண்டனை நெறித் தொகுப்புச் சட்டத்தின்படி ஞாயமான தீர்ப்புகளோ கருத்துகளோ எடுத்துரைப்புகளோ கூறுகின்றவர் உச்ச நயன் மன்றத் தலைமை நயனராக இருந்தாலும் சரியே, நாங்கள் அவர்மீது காலணி வீசிடத் தயங்க மாட்டோம்!" – என்பதற்கு அடையாளமாகவே இந்தச் செயலைத் திட்டமிட்டு அரங்கேற்றி இருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டும் எழுகின்றது.

பழ.நெடுமாறன் ஐயா, "தலைமை நயனர் அவர்கள் மிக்க பெருந்தன்மையுடன் கிசோரை மன்னித்திருந்தாலும், அவர் மீது வழக்குத் தொடுத்து உரிய தண்டனை பெற்றுத் தராமல் விடுவித்திருப்பது எதிர்காலத்தில் இதைப்போன்ற அடாத செயல்களில் பலர் ஈடுபடுவதற்கு ஊக்கமளிக்கும். உச்ச நயன்மன்றத்தின் வரலாற்றில் தலைமை நயனர் மீது செருப்பு எறிந்து அவரை அவமானப்படுத்த நடைபெற்ற முயற்சி இதுவரை நடந்திராத ஒன்றாகும். இந்த அடாத செயல், நமது நயன்துறையின் கண்ணியம், சட்டத்தின் ஆட்சி மீது தொடுக்கப்பட்ட தாக்குதலாகும். மிக எளிய பின்னணியைக் கொண்ட ஒருவர் தனது அறிவினாலும், கடும் உழைப்பினாலும் நமது தேசத்தின் நயன்துறையின் மிக உயர்ந்த தலைமைப் பதவியை அடைந்துள்ளார். இத்தகைய சட்ட மாமேதை ஒருவரை மிரட்டி அவமானப்படுத்தும் முயற்சி மிகவும் கண்டிக்கத் தக்கதாகும். இவ்வாறு செய்த மிக இழிவான ஒருவனைத் தண்டிக்காமல் விடுவது எதிர்காலத்தில் இதுபோன்ற பல்வேறு வேண்டாத நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கு ஊக்கமளிப்பதாகும்".... "இதைப்போன்று நயன்துறைக்கு எதிரான தகாத செயல்கள் நடைபெறுவது தடுக்கப்படவேண்டும். முளையிலேயே இத்தகைய

நிகழ்ச்சிகள் கிள்ளியெறியப்படவேண்டும். உச்ச நயன்மன்றத் தலைமை நயனரை நயன்மன்றத்திலேயே அவமானப்படுத்தத் துணிந்த ஒருவன் அதுவும் மூத்த வழக்கறிஞராக உள்ளவன் மிகக் கடுமையாகத் தண்டிக்கப்படவேண்டும்" என்று கூறுகின்றார்.

மேலும், "தொடர்ந்து பல காலமாக நயன்துறைக்கு எதிரான வெறுப்பு நஞ்சினை உயர்பதவியில் இருப்பவர்கள் தொடர்ந்து உமிழ்ந்து கொண்டே வருகிறார்கள். குடியரசுத் துணைத் தலைவராகப் பதவியிலிருந்த தன்கர், ஆளுநர்களின் முற்றதிகாரப் போக்கிற்கு எதிராக உச்ச நயன்மன்றம் தீர்ப்பளித்தபோது, அதை மிகக் கடுமையாகத் திறனாய்வு செய்தார். பா.ச.க., ஒன்றிய அமைச்சர்கள் பலரும் அவ்வாறே கண்டித்தார்கள். தலைமை அமைச்சரின் பொருளியல் கலந்துரைஞர்களில் ஒருவரான சஞ்சீவ் சன்யால் என்பவர், "முன்னேறிய பாரதமாக நமது நாடு மாறுவதற்குப் பெரும் முட்டுக்கட்டையாக விளங்குவது நமது நாட்டின் நயன் மன்றங்களேயாகும். நயன்மை அமைப்பும் சட்டங்களும் நமது முன்னேற்றத்திற்குப் பெரும் தடைகளாக விளங்குகின்றன. நயனர்கள் குறைந்த நேரமே வேலை பார்க்கிறார்கள். அவர்களுக்கு விடுமுறைகளும் அதிகம். இந்தியாவின் நயன்மை அமைப்பு முறை சீர்கேடான நிலையில் உள்ளது. இந்திய மக்களாட்சியின் (சனநாயகத்தின்) வளர்ச்சிக்குப் பெரும் தடையாக உள்ளது என்றெல்லாம் நயன்துறையைக் கடுமையாகத் தாக்கிப் பேசினார்" – என்றும் நெடுமாறன் ஐயா எடுத்துக்காட்டுகிறார்.

உ.ந.மன்ற வழக்கறிஞர் மன்றம் வழக்குரைஞர் இராக்கேசு கிசோர் தொழில்முறை நடத்தை நெறிகளை மீறியதாகக் கூறிக் கண்டித்து, அவர் மீது நயன்மன்ற அவமதிப்புக் குற்ற வழக்குப் பதிவு செய்தது. இதற்கு இந்திய ஒன்றிய அரசுத் தலைமை வழக்கறிஞர் துசார்மேத்தாவும் ஒப்புதல் அளித்து வழக்கிற்குத் துணைநின்றார். இந்த

வழக்கு 27–10–2025 – அன்று நயனர்கள் சூரியகாந்து, சாய்மாலியா பாக்குசி ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு உசாவலுக்கு வந்தது. எனினும், இந்த நிகழ்வு மீண்டும் கவனத்திற்கு வருவதைத் தவிர்ப்பதற்காக, நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை மேற்கொள்வதில் அமர்வு தயக்கம் காட்டியது. வழக்குத் தொடர்வது தேவையற்ற விளம்பரத்தைத்தான் பெற்றுத்தரும் என்று நயன்மன்றம் குறிப்பிட்டது. தலைமை நயனர் பூ.இரா.கவாய் இந்நிகழ்வு தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டாம் என்று முடிவு செய்துள்ள நிலையில், இதை அப்படியே விட்டுவிடுவது அறிவார்ந்ததாகும் என்று அமர்வு கூறியது.

ஆனால், இந்த நிகழ்ச்சி நிறுவனத்தின் பெருமிதத்துடன் தொடர்பு உடையது என்று மூத்த வழக்கறிஞர் விகாசு சிங் வலியுறுத்தினார். தாக்குதல் நடத்தியவர் தனது செயலை ஞாயப்படுத்தி ஊடக அறிக்கைகள் வெளியிட்டு வருவதையும் அவர் சுட்டிக்காட்டினார். தலைமை நயனர் மீதான தாக்குதலை குமுக வலைத்தளங்களில் சிலர் பெருமைப்படுத்துவது பற்றியும் அவர் கவலை தெரிவித்தார். நயன்மன்றத்தின் மீதான தாக்குதல்களை இணையத்தில் "போற்றிப் புகழ்வதை"த் தடுப்பதற்கான வழிகாட்டுதல்களை உருவாக்கப் போவதாக உச்ச நயன் மன்றம் அறிவித்தது.

இராக்கேசு கிசோர் காலணி வீசிய செய்தி, உயர்சாதியின் சாதிவெறித் தாக்குதல் என்று குமுக ஊடகங்களில் பரவியது. இவ்வாறு ஆங்கில இதழ்களிலும் செய்தி வந்தது. தலைமை நயனர் ஒடுக்கப்பட்ட பிரிவினர் என்பதால், இராக்கேசு கிசோர் மீது வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின்கீழ் வழக்கு பதியப்பட வேண்டும் என்ற கோரிக்கை எழுந்ததை முன்பே குறிப்பிட்டோம். இத்தகைய நிலையில் கிசோர், முதலில் "என் பெயர் முனைவர் இராக்கேசு கிசோர். என் சாதியை

யாராவது சொல்ல முடியுமா? ஒருவேளை நானும் தலித்தாக இருக்கலாம்" என்று கூறியதாக இந்தியன் எக்சுபிரசு, தெக்கான் எரால்டு, இந்துத்தான் தைம்சு முதலிய செய்தி நிறுவனங்கள் கூறின. மறுநாள் அவரே, "நான் பாண்டே, திவாரி, குப்தா இல்லை, நான் 'தலித்' என் சாதிச் சான்றிதழைக் காட்ட அணியமாக (தயாராக) இருக்கிறேன்." என்று கூறியதாகச் செய்திகள் வந்தன. ஆனால், அவர் "அணியம்" என்று சொன்னாலும், பின்னர் எந்தச் சாதிச் சான்றிதழும் காட்டவில்லை. இது ஐயத்தை ஏற்படுத்துகிறது.

"கேட்டினும் உண்டோர் உறுதி" என்பார் வள்ளுவப் பெருந்தகை. உ.ந.மன்றத்தில் நிகழ்ந்த இந்தக் காலணி வீச்சு நிகழ்வு, ஒன்றை நமக்குத் தெளிவுபடுத்தியிருக்கின்றது. 'சனாதனக் காப்பு' எந்த எல்லைக்கும் போகும் என்பதை இந்திய மக்களுக்கும் குறிப்பாகச் 'சனாதன' எதிர்ப்புக் குரலெழுப்பும் தமிழருக்கும் உணர்த்தியிருப்பதே அதுவாகும். தமிழர், குறிப்பாகத் தமிழ் இளையோர் விழிப்புற வேண்டும்!

*கூறுகின்ற சமயமெலாம் மதங்களெலாம் பிடித்துக்*
*கூவுகின்றார் பலன் ஒன்றும் கொண்டறியார் வீணே*
*நீறுகின்றார் மண்ணாகி நாறுகின்றார் அவர்போல்*
*நீடுலகில் அழிந்துவிட நினைத்தேனோ!...*

– வள்ளலார்

*மக்களைத் தாழ்த்தும் மதம் உயர்ந்ததுவா?*
*மதத்தைத் தவிர்க்கும் மக்கள் உயர்ந் தவரா?*
*மக்களுள் பலரைத் தாழ்ந்தவர் என்னும்*
*மாமதங் கொண்ட மதமும் பெரிதா?*
*மதத்தைத் தவிர்த்தால் கொதித்திடும் நெஞ்சம்*
*மலத்தைத் தலையில் சுமந்திட வருமா?*

– பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

**– த.ந.**

# அறத்தொகை

## பத்தறத் தொகைக்கொரு முத்திரைமுன்–

## உரையிது!...

*பத்து அறநெறித் தொகைநூலாகிப் புறம்பெயர்ந்திருக்கும் – இம் முத்துமாலைக்கு அணிசெய்யும் முன்னுரையொன்று வரைந்தளித்தற்கும் முன்னீடாக, – இதுபோன்ற அணிந்துரையமைப்பை ஒரு பருந்து நோக்காகப் பார்த்துவிடலாமே எனக், கொன்றைவேந்தன் பதிப்பொன்றன் முன்னுரையுள் மனம் பதித்தேன்!... ஒரேயொரு பக்கந்தான், அக் "கொன்றைவேந்தன்" பதிப்புரை!... அது,– உரைக்குந் திறச்செய்தியை நீங்களும் உங்கள் கட்டளைக்கல்மேல் உரைத்துப் பாருங்கள்! அது, இதோ!...*

***"இதில் 91 நீதிகள் கூறப்பட்டுள்ளன! அவற்றில் 9 + 1 கூட்டினால் வருவது 10. இந்நூலை முழுவதும் கற்றால் 10–ல் உள்ள சுழி (பூஜ்யம்) நீங்கி நம்பர்– 1 மாணவனாக, கற்றுச் சிறந்த மேலோனாக உயர்ந்து நிற்க முடியும்." – இப்படிப் போகிறது, அதன் கருத்து மழை!.... (வேமன் பதிப்பகம் நுங்கம்பாக்கம், சென்னை– 34 முதற்பதிப்பு 14. 8. 2006)***

*படித்து முடித்ததும்,– தலைசுற்றிக் கண்மயங்கியிருண்டு, உளங்கலங்கி, உடலயர்ந்து, நடுங்கி யொடுங்கிப் போனேன்!... மயக்கம் நீங்க, மணிக்கணக்கும் நீண்டது! இது, இப்படியாகவே கிடக்கட்டும்!... திணறிக் கிடந்த நான், திமிறி முன் நிற்கிறேன்!...*

*... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...*

*இவ் அரிய "அறத்தொகை" – பத்துநூல்களின் மொத்தவுரு! பயன்பயக்கும் இப் பழமரத்து அறவிளைவை உருவாக்கம் செய்தளித்த பெருந்தகை, அறிவருளார் – அன்புருவார் – பண்பெழிலார் –*

பணிவுணர்வார் – கூராய்வு நேர் நெஞ்சத்தாராகும் எம் பெருமதிப்புக்கும் – அரும்பெருமைக்கும் உரிய திரு. இறை. செழியன்ஐயா அவர்கள் ஆகுவர்! அவரால் யானும் – எம் தமிழும் கடந்தியன்ற முப்பதைந்தாண்டுகளாக அடைந்துவரும் பெருநலமும் ஆராக்கமும் உரைப்புள் அடங்குவனவல்ல! அவரின் அன்புக்கட்டளைக்கிணங்கியே இக்கருத்துரைக் குருத்துமுளைப்பின் புறப்பாடும்,– இப்படியாக... ஈண்டே முன்னெழுந்துளது!

கழகக்காலத்து (அவ்வையாரை–) ஔவையாரையடுத்து அவரைப்போலும் புலத்திற வாழ்க்கையராய் இலங்கிய பெண்பாற்புலவர் பலர் – அதே பெயராலேயே மதிக்கப்பெற்றுத் தாய்மையேற்ற மேன்மை தரப்பெற்று – அன்னோரியற்றிய ஆக்கங்களை மதித்தும் படித்தும் பின்பற்றியும் போற்றியும் நீடிய வாழ்வு வழக்கமானது, நம் தமிழ்நில மக்களுக்கிடையில் தொடக்கக்கல்வியுலகத்திலாக, ஓர் ஆறேழு நூற்றாண்டுகளாய்த் தொடர்ந்து ஓர் இயல்பாகவே இருந்து வந்தது!

பொருள்பொருக்கிப் பெருக்கவாழ்வு வாழ்தற்கெனத் தம் மக்களை ஆங்கிலப்பள்ளிகளுக்கும் – கல்லூரிகளுக்கும் – ஆய்வுப்படிப்புகளுக்குமாக மேயவிடுதலையே விரும்பும் தந்தைதாய்மார்களின் மாறாவிருப்ப வினையாட்டுத் தொடர்ச்சி நடைமுறைக் கடைப்பிடிப்பால், – அடிப்படையில் இவ் அற நெறிக் கருத்துக்கள் பயிலும்வாய்ப்பானது நம் பிள்ளைகளுக்கு அறவே வாயாதேயே போயினது! இம் மக்கள் தெரிந்தெடுக்கும் அரசாண்மையருக்கும் இத்தகு அறிவு வாயாது – ஏதேதையோ பற்றியவாறு அவர்கள் சுற்றிச் சுழன்று கொண்டுள்ளனர்! அவர்கள் பெரும்பாலருக்கும் இருக்கும் நோக்கோ– மக்களைப் பற்றியதன்று; மக்களைப் பற்றியேமாற்றி ஆட்சியைப் பற்றுவதே– அவர்க்கிருக்கும் பற்று!

அதியமான் நெடுமான் அஞ்சி – அதியமான் அஞ்சி மகன் பொகுட்டெழினி – எழினி – சேரமான் மாரி வெண்கோ – பசும்பூட்பொறையன்– சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி – கைவண் கிள்ளி– பாண்டியன் கானப்பேர் தந்த உக்கிரப்பெருவழுதி – தொண்டைமான் – நாஞ்சில் வள்ளுவன் – பாரி – முடியன் – அதியர் – கோசர்– மழவர்– பரணர் என ஆகியோர் மிகப்பலரோடும் வாழ்வில் செறிந்த தொடர்பிலிருந்த பெரும்புகழ் சார்ந்திருந்த கழகக்காலஔவையார்க்குப் பின்னர்ப் – 10–ஆம் நூற்றாண்டளவிலாகத் தோன்றிப் பெரும்புகழ் பெற்ற ஔவையாரே, ஆத்திசூடி – கொன்றைவேந்தன்– மூதுரை – நல்வழி என்றவாறான நூல்கள் இயற்றிப் பெரும்பயன் விளைத்த நம் ஔவையார் ஆகுவர்!

இவர் சிவநெறியர் என்பது, ஆத்திசூடி, கொன்றைவேந்தன் என்றவாறுள்ள இரு நூல்களின் பெயர்த் தலைப்புகளின் தலைமிசையில் ஒளிர்கின்றது!

இவ்விரு நூல்களும் மொழிமுதலனவாக வரும் எழுத்துக்களின் அடைவிலாகத் தொடரும் முறைமையில் – இளஞ்சிறார், சிறுமியர்க்கென வேண்டுவதாகிய ஒற்றையடியமைப்பில்– நூற்பாவுக்கொத்த அளவையில் – இன்னோசைக்குரிய இயைவில் ஔவையாரால் யாக்கப் பெற்றுள்ள அறவணிப் பாத்திரள் கோவை, ஆகுவன!

[ஆத்திசூடி வகைப் பாமுறை யாப்புக்கு "நுழைநுதிப்பா" என்னப் பெயரிடலாம்! (நுழை = நுண்மை) (நுதி = முனை) ; கொன்றைவேந்தன் வகைப் பாமுறை யாப்புக்கு – "அரைக்குறட்பா" என்னப் பெயரிடலாம்!]

மூதுரை, நல்வழி என்பனவும் அவர் யாத்துத் தந்தனவே! மூதுரைக்கு "வாக்குண்டாம்" எனும் பிறபெயரும் சுட்டப்பெற்றது!

வாக்குண்டாம் எனத் தொடங்கும் கடவுள்வாழ்த்து ஆக வரும் வெண்பாவின் தொடக்கக்கூட்டுச்சொல் கொண்டு, அம் மூதுரை சூழ்ச்சியாகச் சுட்டப்பெற்றுள்ளது என்பதாகவே நமக்குத் தெண்படுகின்றது!

இம் மூதுரையும் – நல்வழியும் வெண்பா யாப்பமைப்பில் கட்டப்பெற்றுள! இவை இரண்டும் முறையே, முப்பது – நாற்பது எனும் எண்ணிக்கையன!

முதலதான "ஆத்திசூடி", ஈர் – ஈரசைச் சொற்களமைவில் குற்றளவான நூற்பாத் தகைமையில் – நூறெண்ணும் எண்ணிக்கை அளவில் உருவாக்கப் பெற்றுள்ளது!

அடுத்தது, – கொன்றைவேந்தன்! வேய்தல் எனும் வினை, மேல் அணிந்து கொள்ளுதல், எனும் பொருளது! வய் > வை (வைத்தல்). வய் > வெய் > வேய் : மேல் வைக்கப்பெறுதல்; அணியப்பெறுதல்! "கூரை வேய்தல்" எனும் சொற்பொருண்மையுள் இப் பொருளாட்சியை உறுதிப்படுத்திக் கொள்ளுக! வேய்ந்தோன் என்பது, மேல் பொருத்திக் கொண்டவன் – அதுவாவது, அணிந்துகொண்டவன் என்னும் பொருட்பாடுடையது! சேர சோழ பாண்டியராய நம் மும் மன்னரும் "வேந்தர்" என்னப் பெற்றனர் என்னும் செய்தி, அனைவர்க்கும் தெள்ளத் தெளியத் தெரிந்த செய்தி!

2700 ஆண்டுகட்கும் முன்னீடேயே – சேர, சோழ, பாண்டியர் என்னப்பெற்ற நம் மூவேந்தரும் – தாம் தாம் ஈடுபடவிருந்த போர்க்கும் முன்பாகத், தம் தம் குடிப்பூக்களான அடையாளப்பூக்களை வேய்ந்து கொண்ட பின்னரே, – போரீட்டில் ஈடுபட்டாராயினர்! இது, மூவேந்தர்க்கும் தலையாய வழக்கமாகி மரபெனவே நின்றது!

இச் செய்தியுண்மையின் வரலாற்றுப் பதிவானது, – தொல்காப்பியத்துள்ளாகப் – பொருளதிகாரப் புறத்திணையியலுள் காட்சிப்படுத்தமாகவே உளது!

"உறுபகை வேந்திடை தெரிதல் வேண்டி ஏந்துபுகழ்ப் போந்தை வேம்பே ஆர் என வரூஉம் மாபெருந் தானையர் மலைந்த பூவும்" என வந்துள்ள வரிகளுள் இந் நடைமுறையுண்மை கூறப்பெற்றுளது! (தொல்.1006 : 2,3,4,5).

போரீட்டுக்கும் முன்பாகச் – சேரனும், அவன் தானையரும் (படையினரும்) பனம்பூ மாலை சூடிக்கொண்டனர்! சோழனும் அவன் படையினரும் ஆர் என்னும் ஆத்தி மாலையைச் சூடிக் கொண்டனர்! பாண்டியனும் அவன் படையினரும் வேம்பு மாலையைச் சூடிக் கொண்டனர்!

பூச்சூடிக் கொள்ளும் வினைக்கு, "வேய்வு" என்பது பெயர்! சூட்டிக்கொண்ட மாமன்னன் "வேய்ந்தோன் " என்னப் பெற்றுப் பின்னர் "வேந்தன்" என்றாகி நின்றான்!...

மூவரும் – வேந்தர் என்னப் பெற்றுத் தொகையாகக் கூறவேண்டியவிடத்து "மூவேந்தர்" என்றாயினர்!

ஆக, வேய்ந்தோனே, வேந்தன் ஆகினான்! தொல்காப்பியத்துள் – வேந்தன் எனும் ஆட்சி பதினோரிடங்களிலும் – "வேந்தர்" எனும் பலர்பாற்பெயர் ஓரிடத்தும் – வேந்து (=வேந்தன்) என்ற வடிவில் ஆறிடத்தும் பதிவுகளாகவுள! வேந்தனை வேந்து என்றமை, – அமைச்சனை அமைச்சு என்றமை போன்றது! அரசனை அரசு என்பதும் போன்றது!

இவ்வகை மரபிலாகும் – மொழியாளுமை நீடலே, "கொன்றைவேந்தன்" என்றவாறு ஆண்டமையுள்ளும் உளது! "கொன்றை வேய்ந்தோன்" , – "கொன்றைவேந்தன்" எனப் பெற்றான்!

பிற்றைக்கால ஔவைப்பெருமாட்டியின் இந் நான்கு அறநூல்களும் சென்ற நூற்றாண்டின் முற்பாதிக்காலம் வரைக்குமாகிய – ஓர் ஆறேழு நூற்றாண்டுக் காலநீட்சியுள் நம் முன்னோர்களின் தொடக்கக்கல்வியுள் அடிப்படைப் பயில்வு நூல்களாய்ப் பயன்பரப்பியுள்ளன! அக் காலத்துக்குள் வாழ்ந்த தமிழ் மாந்தரின் வாழ்வு நெறியொழுங்கில் பேராளுமை செலுத்தியுள்ள அறக்கருவூலங்கள், இவை!

பன்னிரண்டாம் நூற்றாண்டளவில் "நறுந்தொகை" எனும் பெயரிலெழுந்த அறநூலும் – முன் நான்கினைப் போன்றே பயன் விளைத்தவற்றுள் ஒன்றாகும்!

இதனை இயற்றியவர் "அதிவீரராம பாண்டியர்" என்பார்! கொற்கைப்பகுதியில் ஏதோ ஓர் ஆளுமை நிலையில் ஓங்கியிருந்தவர்! சிறுபாணாற்றுப்படையுள் வரும்– "தத்து நீர் வரைப்பிற் கொற்கை கோமான்" எனும் வரிப் பொருண்மை வழியில் பாண்டியராண்ட தொடர்ச்சியில்– இவ் அதிவீரராம பாண்டியர் என்பாரும் முன்னைய ஆளுமைவழியினரின் எச்ச நீட்சியருள் ஒருவராயிருந்திருக்கவும் கூடும் என்றவாறு எண்ணத் தோன்றுகின்றது!

இதற்கு அடிப்படைகளாகுவனவாக – அவர், – "பாண்டியர்" எனும் பெயர்ப்பின்னடை கொண்டு சுட்டப்பெற்றிருப்பதுவும் – அவரியற்றிய நறுந்தொகை நூலின் முகப்பில் பதிவுற்றுள்ள நூற்பயன் பற்றிய செய்யுளுள் – "கொற்கையாளி" என அவரிருந்த அக்கால இருப்புநிலை குறிப்பிடப்பெற்றுள்ளமையும் அவர் பற்றிய இவ்வகை முடிபுகளுக்கு ஊட்டஞ் சுட்டுவனவாக நிற்கின்றன!

இவர் பாண்டியர் மரபினரே எனும் கருதுகோள் முடிவுக்கு மற்றொரு சான்றாக – நாம் உணர முன்னிற்பது– "பிரமோத்தர காண்டம்" முதலிய நூல்களியற்றிப் பெருமதிப்பிற் கருதப்பெற்ற

வரதுங்கராம பாண்டியர் என்பார், இவருடன் பிறந்தாராகிய அண்ணார் எனும் இவரின் வாழ்வு வரலாற்றுச் செய்தி, – நம் முன் நின்று தெளிவிக்கின்றது!

இந் நறுந்தொகையின் ஆசிரியராகிய அதிவீரராம பாண்டியர் வடமொழியுள்ளும் வல்லார் என்பது, – இவரால் இயற்றப்பெற்று நமக்குக் கிடைத்துள்ள "நைடதம்" – கூர்மபுராணம் – இலிங்கபுராணம்– காசி காண்டம் – வாயு சம்கிதை – திருக்கருவை அந்தாதிகள் ஆகியவற்றால் அறியவியல்கின்றது!

நைடதம், – இலக்கிய வளநலம் செழித்தவாறு யாக்கப் பெற்றுள்ள மீத்தகை சிறப்பு நூலாக்கம்!

அதிவீரராம பாண்டியரியற்றிய இந் நறுந்தொகை, – "கொன்றைவேந்தன்" போன்ற யாப்பமைவில் இயல்வது! பாடல்களின் மொத்தத்தொகை – எண்பத்திரண்டு எனும் எண்ணிக்கை கொண்டது. பெரும்பாலன, "அரைக்குறட்பா" அமைப்பின! சிற்சில இருநிறைவரி அமைப்பின! சில மூவரிநிரல் அமைப்பின! நால்வரி அமைப்பினவும் – ஐவரி அமைப்பினவும் – அறுவரி யமைப்பினவுமாகியும் சிலவுள! கருத்தளவுத் தேவைக்கென – அவ் வெளிப்பாடுகள் கூடியும் குறுகியும் பொருந்தப் பதிவாகியுள!

இந் நறுந்தொகையின் நூற்பயன் பதிவுச்செய்யுள், – "வெற்றி வேற்கை" எனத் தொடங்கியுள்ளது! இதைப் பற்றியே "வெற்றிவேற்கை" எனும் பெயராலும் இது சுட்டப்பெறுகின்றது!

ஔவையார் இயற்றிய மூதுரை எனும் நூல் – அதன் கடவுள்வாழ்த்துப்பாடலுள் பதிவுற்றுள்ள "வாக்குண்டாம்" எனத் தொடங்கிய அமைப்பினைப் பற்றி, "வாக்குண்டாம்" என்ற பெயராலும் அம் மூதுரை வழங்கப் பெற்றதைப் போன்றதிது!

தமிழ் வரைப்பு ஆகிய தமிழ் எல்லைக்குள் – தொம்பை வயிற்றுடம்பில் யானைத் தலையைத் தறித்துப் பொருத்தி – நான்கு கைகளையும் பக்கவாட்டுகளில் பிணைத்து – அவற்றுள் சில கருவிகளைப் பிடிக்கவைத்துத் தலையினின்று தொங்கிய தும்பிக்கையைச் சுருளக் கீழ்த் தொங்கவிட்டு – ஒரு கொம்பை மட்டும் நறுக்கியெறிந்துவிட்டு ஒற்றைக்கொம்பை மட்டுமொட்டி அவ்வளவு பெரிய சுமையுடம்பையும் ஒரெலி மீது குத்தவைத்து – அதற்கு ஊர்தித் தகைதந்து – அப்பமொடவல்பொரி கப்புதற்கென்று பெருந்தட்டொன்றில் கணக்கக் கொட்டிவைத்து, வணக்கத்துக்குள்ளாக்கிய – வழிபாட்டுக்குள்ளாக்கிய நம்மிற் பெரும்பாலரையும் மடமூடமுட்டாள்கள் என ஆக்கிய கருமவினையானது – ஏழெட்டு நூற்றாண்டுகளாகக் கொடிகட்டிப் பறக்கின்றது! தேவாரக் காலத்திலேயே இக் கேடுங் கெடும்பும் தொடங்கப்பட்டுவிட்டமையை உணரவியல்கின்றது!

நாயகன் எனும் செந்தமிழ்ச்சொல்லொடு, சமற்கிருத முன்னடை கொண்டு – அதுவாவது, (வி) எனும் நன்மைப்பொருள் குறித்த குறியெழுத்தினை முன்னிறுத்தி "விநாயக" என்றவாறொரு பிணிமிடை பவழக் கூட்டுச்சொல் கட்டிக் – கழகக்காலத்திற்கு மிகப்பின்னீடேயே தமிழகத்தில் அவ்வுருப் பொம்மையைத் துருத்துளர்!

தெய்வத்து நம்பிக்கையும் விருப்பும் வாய்ந்த பழம்புலவர் பல்லவருள் எவரும், ஆனைமுகத்தான் பெயர் வகையுள் ஒன்றனையும் தாங்கினாரிலர்! அவ்வலம்பலாகிய – விலங்குத்தலை மாந்தவுடற் கூட்டுரு அமைப்பிலாகிய வழிபாட்டுக்கற்பனையுரு, தமிழகத்துள் படிவும் பதிவும் எய்தில என்பதற்குச் சான்று– அன்றைய பெயரமைவுள் எவர்க்கும் வாயாதிருந்தமையிலும் உளது!

தெய்வத்தாற் பெயர்பெற்ற பண்டைய கழகப்புலவர் பெருமக்கள் ஐம்பத்தொண்பதின்மர் (59) (ஐம்பத்தொண்டு எனும் எண்ணிக்கையர்) இவ் 'விநாயக வாடை' எவர் பெயரீட்டிலும் அடித்திலது! [வாடை என்பது – வடக்கிலிருந்து வீசும் காற்று அல்லது நாற்றம்!] இறையன் – குமரன் – சாத்தன் – கண்ணன் – பூதன் – தேவன் – பேயன் என்றவாறெல்லாம் பலரும் பெயர் பெற்றிருந்துளர்! ஏன், ... தாமோதரன் – உருத்திரன் – பிரான் – பிரமன் என்றவாறுங்கூட– சிலர் இருந்துளர்! விநாயகன் எவனும் அவருள் இலன்!

"விக்கினம்" எனும் ஒரு சொல், வடமொழியாளர் ஆக்கின சொல்! இடையூறு – தீது – தொல்லை என்பன போன்ற சொற்பொருண்மைகள் கொண்ட வடசொல், அது! வடவர் நம் பால் துருத்துத் திணித்த வட சொற்களுள் இதுவுமொன்று!

தமிழாக்கங்களுக்கிடையில் இச்சொல்லை நுழைத்துத் திணித்த காலம் – ஆறு அல்லது ஏழாம் நூற்றாண்டளவுக்குள் ஆகலாம்! விக்கினம் = இடையூறு. "முனிவர் நரர் விக்கினம் அகற்றி" (திருப்போரூர் சந்நிதி பிள்ளைத்தமிழ்– விநாயகர் துதி) விக்கினம் = தீது (திவாகரம்). விக்கினம் எனும் சொல்லும் – விநாயகன் எனும் சொல்லும் தொடர்ந்த அணி கொண்ட முதலாட்சி, தேவாரத்துள்ளிருந்து தொடரலாயிற்று! (காண்க : "குமரனும் விக்கின விநாயகனும்" – தேவாரம் : 259 : 10)

"விக்கினம்" எனும் இவ் வடசொல்லை அடையாக முற்கொண்ட இந்த யானைமுகவுருவப் பொம்மைக்கு – விக்கினநாயகன், விக்கினராசன், விக்கினேசுவரன், விக்கினேசன், விக்கினாரி என்றவாறாக வரும் வகைப்பெயர்களும் உள! (காண்க : செ.ப.க. அகராதி பக். 3631) (விநாயகர் புராணம்– கச்சியப்ப முனிவர்)

இடையூறும் – தொல்லையும் – தீங்கும் தரும் கடவுள் என்றவாறு, பொருட்பாட்டுமயக்கம் ஏற்பட்டுள்ளமையையும் – அப்படியாகக் கருதுதற்கு இச் சொல்லமைவு இடந்தருகின்றது என்பதையும் நன்கு கருதிப் பார்த்து, அதனின்று தப்பிக்கும் முகமாக – தப்பைத் திரித்து நேர்செய்யும் திறமுறையிலாக– (விக்கினமாகிய–) இடையூற்றை நசியச்செய்யும் இறைவன் என்றவாறு, பொருள்கொள்ளுமாறு அனைவரையும் அமைவுக்கு உட்படுத்தும் வகையில், – 'விக்கினவினாசனன்' – 'விக்கினநாசனன்' (இடையூறு தீர்ப்போன்) என்னுமாறான பெயர்களை அக்கால அகராதி உருவாக்கிகள் படிப்பார் பார்வைக்கு முற்படுத்தினர்! [யாரோ– எவரோ இவற்றைச் செய்தனர் – என்றவாறு எண்ணலாகாது! (பார்ப்பான் கட்டளையின் கீழ் – அவன் விரும்புவான் என்னும் அடிப்படையின் கீழ், – நாம் நம் உறவென்று நம்பும் வையாபுரிக்குழுவினர்தாம் இத் தகாவேலைகள் பலவற்றையும் உழைப்பெடுத்துக் காட்சிப்படுத்தி நிறைத்துள்ளனர்!)]

பதினெட்டு வகைக் குழுவுக்குப் "பதினெண் கணம்" என்பது பெயர்! இதனைப் பதினெண் கணவகை எனப் பிங்கலம் அவ் வகை விரிவைப் பட்டியலிடும்! (காண்க: பிங்கலம் : 92) இவர்கள் யாவரும் சிவனின் குழு! இச் சிவன் குழுவின் தலைவன், "கணபதி!" இப்படி என்னென்னவோ செய்திருக்கிறான், பார்ப்பான்! (நம் அடிமை நாய்களும் கூடிக் கொம்மாளமிட்டுக் கூத்தாடியுள்ளன!)

சிவனின் குழுத் தலைவன் கணபதி எனப்படுபவன், வேறு யாரும் அல்லன்!... இதே விநாயகப் பயல்தான், என்றான் பார்ப்பான்! நம் வீண் நாயகத் தலையாட்டியராகிய தமிழர் தாமும் தூக்கிக்கொண்டு, தும்பியாடினர்! தும்பியாடியது, தும்பிக்கையான் ஆகிய ஆனையானொடுந்தான்!... கணமும் தமிழ்! – பதியும் தமிழ்! "கணப்பதி" என்றிருப்பின் அது தமிழென்றே எண்ணியேற்றிருப்போம்! நல்ல

வேளை, வலி மிகாதவாறு "கணபதி" என்று கட்டவிழ்த்து நிறுத்தினான், பார்ப்பான்!

இக் "கணபதி" என்னும் யானைமுகன் (கரிமுகன் – கயமுகன்) நம் தமிழர் சிந்தித்து வளர்த்தெடுத்த மதத்துக்கோ– நம் இனத்துக்கோ எவ்வகையிலும் தொடர்பிலி! அயலவனே! அயல் இருபிறப்பியே! (*hybrid*)

அறநூல்கள் பரவற் பயன் உறுகையில் – நம் அடிமையர்க்கு உருத்தெழுந்த "அயன்மைமேல் வெறி" (*xenomania*) மனக்கோளாறு காரணமாக, – இடைக்கால அறநூல்களின் தலைகளிலெல்லாம், இவ் ஆனைமுகப்பொம்மன் ஏறியாடத் தொடங்கினான்! ஔவைப்பெருமாட்டியின் ஆத்திசூடி நூலின் அற வரிகளில் – ஒன்றாகிய "தூக்கி வினை செய்" (எண் : 60) என்றவற்றை ஆராயாதேயே,– ஓராதேயே இவனைத் தூக்கி ஆடவிட்டுவிட்டான்! (தூக்கி = எது சரி – எது சரியன்று என, ஒன்றனை மேலெடுத்து எடையிட்டு ஆராய்ந்து பார்த்து!) இப்படியாகப் பட்ட ஆய்ந்து பாராமையை "நாடாமை" எனும் சொல் கொண்டு சுட்டினார் நம் வள்ளுவர் பெருமான்! இந் நாடாமையென்னும் இழிகுணம் நம் தமிழப்பேதைக்கு உண்டு என, ஈராயிரத்து ஐம்பத்தாறு ஆண்டுகட்கும் முன்னரேயே பதிவு செய்தார், அவர்! (காண்க: குறள்: 833)

இவ்வானைமுகனாட்டத்தை அல்லது அவனடியாராகிப்போன நம் அடிமையரேற்றி ஆட்டுவித்தமையை – ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, வெற்றிவேற்கை, நன்னெறி, உலகநீதி ஆகிய ஏழு நூல்களின் பரணைகள் மீது காணவியல்கின்றது!

இம் மேற்குறித்தவாகிய ஏழு நூல்களுக்கும் மிக முற்பட்டெழுந்த பிங்கல நிகண்டு பொ.ஆ.பி (கி.பி) 900 – 925 ஆண்டுகட்கு இடைப்பட்டுத் தோன்றியது! வான்வகை பற்றி

வரைவுற்றதாகிய முற்பகுதிக்குப் பின்னீட்டுப்பகுதி வானவர்வகை என்பது! தெய்வப் பெயர்களைப் பற்றிய குப்பைத் தூற்றுக் குவிபாடுகள் குழுமிக்கிடக்கும் கிடங்கு, அது! அதனுள் முதல் நூற்பா, "கணபதி" என்னும் இவ் விநாயகனுக்கு உரியது! அவனுக்கென அம் முதல் நூற்பாவுள் பதினான்கு பெயர்கள் சுட்டப்பெற்றுள!

சேயோனாகிச் சிறந்திருந்த சிவனுக்கும் – மாயோனாகி முல்லையுளிருந்தொளிர்ந்த மாலவனுக்கும் மேலான தகுதிப்பாட்டை, – முந்தித் தொங்கலுற்ற தும்பிக்கையானுக்கு முந்தியன்மை மூட்டிய முந்திரிக்கொட்டையராய மிகப் பல்லவர் பத்தாம்நூற்றாண்டுக்கும் முற்பாடாகவே முளைத்திருந்துளர்!

சிவனுக்கு நூறு பெயரீடுகள்! சிவனின் மனையாட்டி சிவைக்கு முப்பத்தெட்டு பெயரீடுகள்! இருவரையும் புணர்த்தி மகற்பேற்றை உருவாக்கிச் சேயோன் எனும் பெயரிலாகிய அவ்வுருவனையே சேயாக்கி அவன் பெயர், – "முருகக்குமரன்", சிவன் – சிவை எனும் அவ் விருவருக்கும் கான்முளையாகிய பிறங்கடையனாகுவன் எனவும் குடும்பத்தை விரிவுபடுத்தியவன், இத் தமிழனே! அம் முருகனுக்கு வேலொன்றினைக் கையிற்கொடுத்து மயிலிலேற்றி உலாவரச் செய்து கலாம் விளைத்தவன், நம் தமிழன்! முருகனுக்கும் முப்பத்தேழு பெயரீடுகள்! திருமாலுக்கு எழுபது பெயரீடுகள்! இவ்வாறாகப் போகும் பெயர்வெள்ளப்பெருக்குக்கும் மேலோட்டத்துள் நுரைமிக்கெழுமாறு மிகவுப்பட மேனிறுத்தி மாட்டியாட்டுவித்தமையை ஏஎதோ ஒரு பொதுச் செய்தியென நம்மாற் கடந்துபோக இயலவில்லை! அவ் வானையனைப் பற்றிய பெயரீடுகள் பெரும்பாலவும் கலப்புமொழியாகிய செயற்கைப்பொம்மை மொழியாம் சமற்கிருதத்துள்ளாக உருவாக்கப்பெற்றவை! விநாயகனும் கணபதியுங்கூட அம் மொழிசார் வடிவுகளே!

பௌத்தம் என்னப் பெறும் அறிவமதத்தின் அரும்பெருமையை முற்றவுமுயர்த்தி – அதற்கெனவே யாக்கப் பெற்றதாகிய "மணிமேகலை" எனும் செந்தமிழ்ப்பாவியத்தினைப் பதிப்பிக்கும் வாய்ப்பானது– தமக்குக் கிடைத்தபோது, அந் நூற்பெயர்த் தலைப்பின் தலையிலாக "உ" –என உகரச் சுட்டெழுதி அவ் வுகரக்குறி ஆனைமுகனின் முற்பக்கத்தே இழிதரும் தும்பிக்கை வளைவுருவினை ஒத்தவுரு போன்றிருத்தலால் அது "பிள்ளையார்ச் சுழி" எனக் கொண்டு நிறுத்தி – அக் குறிக்கடியிலாகக் "கணபதி துணை" எனப்பதித்துவந்து இறப்பிலிறந்தவராகிய உ.வே.சாவையும் – அவர் மூளையணுக்களுள் அடர்ந்திருந்த இனக்கொழுமையுணர்வையும் ஏஎதோவொரு பொதுப்பாட்டுச் செய்தியாக நம்மாற் கடந்துபோக இயலவில்லை! (காண்க: 1898– இனின்று தொடர்ந்தெழுந்த (1981– வரை) எழுபதிப்புகளாக மேற்பட்டவற்றுள் உள்ளாகியுள்ள தொடக்கப்பக்க மீமுனை மேற்பகுதிகள்!...)

பண்டைப் பழம்பெரு புலவர்களின் அறிவாக்கத் துணுக்குகளான தனித்தனி அரும்பாக்களின் தொகுப்பாக்க முயற்சியானது, தொழற்கும் போற்றற்குமுரிய மொழியின வரலாற்றுக் காப்பாற்றுத் தொடக்கப் பெருவினை ஆகும்! அவ்வத்தொகுப்புக்கும் முன்னீடாகக் கடவுள்வாழ்த்தொன்றனை முற்படுத்தும் வழக்கொன்றும் ஊன்றலுற்றது!

பத்துப்பாட்டு – எட்டுத்தொகை – பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் எனும் எவற்றினுள்ளும், – இவ் ஆனைமுகனுக்கு இடமில்லை! ஏனெனில்– முழுவனாக அவன் அக்கால் உருப்பெற்றானல்லன்!

சிவனின் மகனாகக் குமரன் சுட்டப்பெற்றதும் – பின்னீட்டிலாகிய ஓர் இட்டுக்கட்டே! இக் குமரனுக்கு மூத்தவனாகிய அண்ணன் – இப் பிள்ளையாகிய யானைமுகன் என்றது, அடுக்காத ஓர்

இட்டுக்கட்டுப் புரட்டு! இதற்காக அவனையே "பிள்ளையார்" என ஆரீறு பூட்டி அடியாரெலாம் ஆணியறைய வேண்டியதாயிற்று!

பத்துப்பாட்டு, எட்டுத்தொகை எனவாகும் பதினெண்மேற்கணக்குத் தொகை நூல்கள் – அடுத்த பதினெண் கீழ்க்கணக்குத் தொகைநூல்கள் நம் தெள்ளிய அறிவர்களின் அருமுயற்சியால் காப்புற்ற காலத்தில், மக்கட்பயனுக்கென அவற்றை முற்படுத்தும் முன்னீடே– அவற்றை அன்னோர் மதிப்பாரவும் பொறுப்பாரவும் போற்றிப் படித்துப் பயன்பெறக் "கடவுள் வாழ்த்து" முன்னமைந்திருப்பின் பயன் கூடுமென எண்ணி முறை மேற்கொள்ளப் பெற்றது! அதுவாவது, கால் கோளிடப்பெற்றது!

இக் கால்கோளீட்டுக்கும் முன்னீடாக, அதுவாவது முற்பாடாக, – நூலொன்றனை உருவாக்கும் வினைப்பாட்டின் தொடக்கத்தில் – "உலகு" அதுவாவது, தாம் வாழும் இப் பேருலகு (உலகம்) மதிப்பார்ந்த அதன் பெருமை துலங்கும்படியாகக் குறிக்கப்பெறுதல் வேண்டும் எனும் மேம்பட்ட பொதுமையுணர்வை முற்படப் பதிவுசெய்யும் மாண்புமுறையொன்று, – இத் தமிழக அறிவுப்பெருமக்களிடம் செயற்பாட்டிலிருந்தது!

உலகம் என்பது மங்கல மொழி எனும் உணர்வு – அனைவருக்கும் வாய்ந்திருந்த பண்பட்ட காலம், அது! நாகரிகப் புலவர் பெருமக்கள் அப் பண்பாட்டு முறை வழக்கை வழாது செயற்படுத்தினர்!

"நனந்தலை யுலகம்" (முல்லைப்பாட்டு : 1) – "ஆர்கலி யுலகத்து" (முதுமொழிக் காஞ்சி: 1:1) – "வையகம் பணிப்ப" (நெடுநல்வாடை) – "மணிமலைப் பணைத்தோள் மாநில மடந்தை" (சிறுபாணாற்றுப்படை : 1 ) – "மாநிலம் சேவடியாக " (நற்றிணை: கடவுள் : 1) – "உலகந் திரியா" (மணிமேகலை:1:1) –

"முதற்றே உலகு" (திருக்குறள் : 1: 2) – "ஓங்கு திரை .... வியன் ஞாலத்து" (மதுரைக்காஞ்சி: 1–4 )

(விசும்பு – ஞாயிறு– ஊர் என்றவாறு வரூஉம் மங்கலவழக்குத் தொடர்ச்சி முற்படுத்தங்களும் அறிவருலகின் முற்பகுதிகளில் முற்பட்டிருந்த காலம், நம் பண்டைய தமிழகக் காலம்!)

விசும்பு – உலகு – ஊர் என வரும் எவற்றிற்கும் மூலமாய ஞாயிறும் மங்கலவழக்குப் பதிவுள் முன்னொளிர்வுற்றது! சிலப்பதிகாரத்து முகப்பில் – "ஞாயிறு போற்றுதும் – ஞாயிறு போற்றுதும்" – என வழுத்தியதனுள்ளும் இவ் வழக்க நெறிவகைமை நீடல் வரலாற்றை நம்மால் உணரவியல்கின்றது!

பாயிரம் பதிக்கும் வழக்கமுறை நீடுகையில் – அதனைப் பயன்படுத்தி மதவேட்புமடவர் தம் அறியாமை மிகவுக்கோளாற்றால் அளவிறந்த கடவுள்வாழ்த்துக்கோள்களில் திரிவுகள் ஏற்படுத்திக் குழப்புவாராயினர்! அவற்றுளொன்றே, – இப் பிள்ளையார் ஆகிய பொம்மனின் துருத்தம்!

இனி, நம் பகுதியுள் புகுவோம்!

1. ஆத்திசூடியின் கடவுள் வாழ்த்து:

"ஆத்திசூடி அமர்ந்த தேவனை
ஏத்தியேத்தித் தொழுவோம் யாமே!"

ஆத்திசூடி (சிவன்) அமர்ந்த தேவன்= விநாயகன்!
(= சிவபெருமான் விரும்பும் விநாயகன்)

2. கொன்றை வேந்தன் – கடவுள் வாழ்த்து:

"கொன்றை வேந்தன் செல்வன் அடியினை
என்று மேத்தித் தொழுவோம் யாமே"

(கொன்றை வேந்தனாகிய சிவனின் செல்வனாகிய பிள்ளையார் எனும் விநாயகன்)

3. மூதுரைக் கடவுள் வாழ்த்து:

"வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது– பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கை யான்பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு"

(தும்பிக்கையான்= விநாயகன்)

இக் கடவுள் வாழ்த்து வெண்பா, "வாக்குண்டாம்" என்றவாறு தொடங்குவதைப் பற்றி, அதனையே வாயுள் துருக்கும் முகமாக, "வாக்குண்டாம்" என்ற பெயராலேயே நிறுத்தி வழங்கவைத்த குசும்பும் – குறும்பும் அடாஅடியும் எண்ணி வருந்தத் தக்கன! மூதுரையே மறைந்தது! குண்டாம் குன்றேறியது!...

4. நல்வழி : கடவுள் வாழ்த்து

" பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான் தருவேன்– கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத்தமிழ் மூன்றுந் தா"

(= கரிமுகத்துத்தூமணி = யானை முகத்தனாகிய விநாயகன்)

இவ் ஔவையார், சிவநெறியர்! "சிவாய நம" என்று சிந்தித்திருப்போர்க்கு அபாயம் (அஞர், இடர், இக்கட்டு, துடும்பேரஞர்) ஒரு நாளும் இல்லை,– என உரத்தொலித்தவர்! (பா : 15) இரு நூல் தலைப்புகளிலும் – (அவையாவன – ஆத்திசூடி எனச் சிவனை உள்நிறுத்தியும், அவனையே கொன்றைவேந்தனாகக் கண்டு ஏத்தியவளும், இவ் ஔவை ஆவாள்!)

சிவனை மட்டுமன்றி – அவனொடு திருமாலையும் உருவாக்கி வணங்கிய தமிழின மதவழக்கம் ஏற்று – "திருமாலுக்கு அடிமை செய்" (ஆத்திசூடி : 56) என்றவளும், அவள்! சிவனியத்தையும் மாலியத்தையும் பொதுக்கருவறையில் சமன்பெற நிலைநிறுத்திச் சமயப் பொதுமைபேசியவள், அவள்! ஓரிடத்தில் திருமகளைச் சுட்டினாள்! (காண்க: நல்வழி : 21 : 4) மற்றோரிடத்தில் – அவளின் அக்கையாள் மூதேவியைத் தாக்கினாள்! (காண்க: நல்வழி : 23) எங்கேயவள், தம் ஆக்கத்துள் ஆனைமுகனை ஏற்றினாள்?! திருக்குறளைப் போற்றினாள்! திருக்கோவையார் – திருவாசகத்தைப் போற்றினாள்! ஞானசம்பந்தர் – நாவுக்கரசர்– சுந்தரமூர்த்தியார் என்னப்பெற்ற முத்தமிழ்ஞானியர் யாத்தளித்த தேவாரத் திருமறையைப் போற்றினாள்! நான்மறை என்னப் பெறும் வேதங்களில் தீர்வுகளாகிய முடிபுகளுக்குக் காரணக்கருவாக இருந்தவை அருகடியமர்ந்தோத்து எனும் தமிழ் உபநிடதங்களேயெனக் கண்டு காட்டினாள்! (காண்க: நல்வழி: 40) (ஓரிடத்தும் இக் கோளாற்று இரு பிறப்பியை (hybrid) அவள் கற்பனையுள்ளும் கண்டாளென எங்கும் சான்றிலை! அத் திரிபுனைவை உருவாக்கிய சூதர், இருபிறப்பாளரே! (துவிஜா) இரு பிறப்பாளராய பிராமணரே!)

ஊழ் (விதி) பற்றிக் கவலையுறாதே! ஆரியமறை எவற்றினுள்ளும் அது நீங்குமாறு வகைசெய்ய வல்ல ஒரு முடியும்(!) இல்லை! தீர்வுமில்லை! (வினைப்பயனை வெல்வதற்கு வேதம் முதலாம் அனைத்தாய நூலகத்தும் இல்லை!) கவலைப்படேல் நெஞ்சே!– என, நம் துயர் மீட்சிக்கு விடிவுகூற முன்னெழுந்து வந்தவள், அவள்!

கடவுள் வாழ்த்து என, அவள் எதையும் எழுதவேயில்லை!

அடுத்தாவது :

வெற்றிவேற்கை எனும் நறுந்தொகை இயற்றிய அதிவீரராம பாண்டியர் – நற்றமிழ் நன்கறிந்த புலக்கல்வியாளர்! பதினேழாம்நூற்றாண்டில் வாழ்ந்தவர்! (1564–இலிருந்து 1610–வரை வாழ்ந்த தமிழறிஞர்!)

இறைவன் என்பவன், ஆசிரியன் என்போனை விடப் பெரியவன் ஆகான்! "ஆசிரியனே இறைவன்" என்ற தெள்ளறிவுப் பெருமகன், நம் வீரராமன்! (காண்க : எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்!. – நறுந்: 1)

தாம் எழுதிய 82 அறக்கருத்துச் செய்திகளினுள்ளாக எவ்வோரிடத்தும் இறைவகைமையன் எவனையுமே சுட்டாதவனாகிய பெருமையன், இப் பேரறிஞன்! அவனின் அனைத்து வெளிப்பாடுகளும் கொள்ளை அழகின!

அவன் எழுதியதாகக் கருதப்பெறும் கடவுள்வாழ்த்து – எதுவோ "ஒரு மொண்ணைப் பார்ப்பின் வார்ப்பு" என்பதாகவே, நமக்குப் படுகின்றது! (மொண்ணை = மொழுக்கை) ( மழுங்கிய மூளை)

"தந்திரி" என்னும் ஒரேயொரு பிறமொழிச் சொல்லை – முன் வரியுள் வரும் ("மந்திரி" எனும் செந்தமிழ்ச் சொல்லுக்கு எதுகைத் தோதுபடும் வகையில்–) வேண்டுமென்றே கையாண்டிருப்பதைத் தவிர – மொத்த கருத்துருக்கள் எண்பத்திரண்டனுள் – எண்பத்தோரொன்று எனும் எண்ணிக்கையுடையவாகிய கருத்துவரிகள் யாவுமே தூய செந்தமிழ்ச் சொற்களாலாகிய யாப்புகள்! செழும் பதிவுகள்!

அப்படியாகப்பட்ட அறிவனொருவன், "பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்" என்றவாறு கடவுள் வாழ்த்தொன்றைத் தொடங்கியிருப்பானா? அப்படிக் கூடுமா? முட்டுக்கட்டைகள்தாம் இது உண்மையென உளறிக் குளறும்!...

அடுத்துள்ளதாவது :

தேர்ந்த அடிகளாரான சிவப்பிரகாசரின் "நன்னெறி" எனும் செந்நறுஞ்செழுநூல்! காவடிச்சிந்தெழுதி அக்கால் கலக்கிய வலவராய அண்ணாமலையென்பாரோடும் தொடர்பிலிருந்தவர், இச் சிவப்பிரகாசர்! 19–ஆம் நூற்றாண்டினர்! சிறந்த கல்வியாளர்! சிவனெறி அடிகள்! மணங்கொளாது துறவியராய் வாழ்ந்த பெருமகன்!

அவராக்கத்துள் – அவிர்சடைச் சிவனின் தோற்றத்தினை ஆய்ந்து வாழுநர் எனச்சிறப்பித்துக் குறித்துள்ள கருத்தொன்றனுள்ளாக – அவரின் கடைப்பிடி சிவநெறியே என்பது துலங்குகின்றது! (காண்க: நன்னெறி:21) அவர் இவ் விநாயகனை அடிதொழுவதாகிய வீண்வேலையைச் செய்திருக்க வழியேயில்லை! சிவநெறி மெய்ம்மங்களை மேம்பட ஆய்ந்து உருகி வாழ்ந்த பேரறிஞர் அவர்!

சிவப்பிரகாச அடிகளார் – காலஅளவிலாக மிக அண்மையரே எனினும் – விநாயகனுக்கு அவர் அயன்மையராகவே நமக்குத் தெரிவுறுகின்றார்!

இவ்வாறனையும் அடுத்தது: –

உலகநாதப் பண்டிதர் எனும் ஓர் ஆசிரியர் இயற்றிய "உலகநீதி" எனும் அறநூல் பற்றியதாகும்!

உலகநாதமுனிவரெனக் கருதி மதிக்கப்பெற்ற ஓராசிரியரே – இந்நூலை இயற்றியளித்தவராவார்! இளைய அகவையிலேயே மறைந்தவர். (காலம் 1525 – 1550) இருபத்தைந்தாண்டுக்கால வாழ்க்கை! பதினாறாம் நூற்றாண்டினர்!

இவரியற்றியுள்ள "உலகநீதி" என்பதனுள்ளாக, எண்சீர் மண்டிலயாப்பால் ஆக்கப்பெற்றுள்ள பதின்மூன்று பாடல்கள் தொகையுற்றுள!

அந் நூலுக்குக் "கடவுள் வாழ்த்து" கட்டியவன் – அப் பதின்மூன்று பாடல்களாகிய அத் தொகுப்பினை – "உலகநீதிப் புராணம்" என்றவாறு பெயரிட்டுக் கூறிய வகைமையுள்ளாக – அவன் இவ்வாக்கத்தை இட்டுக்கட்டிக் குத்தியுள்ள பாங்கே, பச்சையாகத் தெரிகின்றது!

வறுமை நிலையிலாக நீடிவாடிய குறுங்கால வாழ்க்கையர் இவர் என்னும் உண்மை– "வாத்தியார் கூலியை வைத்திருக்க வேண்டாம்" (பா:8:5–ஆம் வரி) என்றவாறு இரங்கியுரைத்து தந்நிலை அவலங்காட்டுவதனுள்ளும் – அதுவே போன்று, பதினொன்றாம்பாவினுள்ளாக, "சகலகலை ஓதுவித்த வாத்தியார் கூலி.... கொடாத பெயரை ஏதேதும் செய்வானோ ஏமன் தானே!" எனச் சாவித்தரற்றுவதன்னுள்ளும் புலப்படுகின்றது!

மதக்கோட்பாட்டளவில் உலகநாதர், ஒரு முருகனடியார்!

ஆறுமுகனை – வள்ளிபங்கனான முருகனை – குமரவேளை – மயிலேறும் பெருமாளை – என்றவாறெல்லாம், அவரியற்றிய உலகநீதிப் பாக்கள் பதின்மூன்றனுள்ளாகிய பன்னிரண்டுப் பாக்களுள் மீண்டும் மீண்டும் வகை பெறச் சுட்டிப் பதிவுறுத்தியுள்ளமையுள் அவரின் பத்திமை வகையே துலங்குகின்றது!

இங்ஙனமாக வாழ்ந்துயிர்த்திருக்கையில் – அவர், எங்ஙனம் ஆனைமுகனை ஆரத் தழுவி வாழ்த்தியிருக்கக்கூடும்?!...

ஆக, ஈண்டு இத் தொகையுள்ளாக – ஏழு எண்ணிக்கையிலாக விளங்கும் அறநூல்களின் முகப்புத் தலையில் கடவுள் வாழ்த்து இது இதுவென இட்டுக்கட்டி இழுத்து மாட்டித் திசைதிருப்பியுள்ள வெற்றோல வீண்பதிவுகளாகிய தாறுமாற்றுக் குழப்படிகளைப் படிய முன்வரும் யாவரும் இத்தகு ஆய்வு வெளிப்பாடு வாயிலாக அறிந்து –

தெளிந்து – மெய்ம்மையுணரவேண்டும் என்பதற்காகவே – விரிவார வரைய வேண்டியதாயிற்று!

அறிஞர் இறை. செழியன் ஐயாவின் வல்லிய கவனக் கட்டுழைப்பில் இத் தொகை நூல் உருவாக்கம் பெற்றுள்ளது! இதனைப் பயனுக்கென உருவாக்குதலில் – தேவையற்றன எனத் தாம் தம் அறிவளவால் எடையிட்டுச் சிலவற்றை வேண்டாமென்றே தூக்கியெறிந்து விட்டு இதனை முற்றுவித்திருக்கிறார்கள்!

அவற்றுள்ளாகத் தகாப் பதிவுற்று இதுகாறும் நீடிவந்த கடவுள்வாழ்த்துகள் ஏழனையும் தறித்தெறிந்திருக்கிறார்!

இவ்வாறாக – மூலநூல்களில் நீடிய பதிவுச் செய்திகளை எவ்வாறு நீக்கிப் பதிக்கலாகும் – எனக் கனன்று கேள்விக்கணைகள் எழுப்பி ஆய்வுநெறி சுட்டி எகிறலாகும் அறியாக்குறிகளுக்கு உரிய விடை சொல்லி ஒப்பேற்க ஒத்துழைப்பது அறிவு நயன்மை சான்றது என்பதால், அக் கடப்பாடு என் தலையில் விழுந்தது!

அவரின் நன்னய நெஞ்சுக்குத் தவறாகப்பட்டவை – அவராலேயே முறையுறத் தறித்தெறியப்பட்டுள! நானும் – ஐயா செழியன் அவர்களும் தமிழியஞ் சார்ந்த மொழி இன நில நல ஓர்மையுணர்வோட்டத்தில்– ஒத்த அதிர்வியக்க – அலையிணக்க நெஞ்சத்தவராக ஒரு மூன்று பத்தாண்டுக் காலத்துக்கும் மேலாக – நீடிய ஒருமைசார் தீர்வுமுடிபுகளில் ஒத்தோராகவே இயங்கி வருகின்றோம்! அவர்க்குச் சரியெனப் படாதன– எனக்குஞ் சரியெனப் படாதனவாகவே சமன்பட்டுள!

அறநூற்பண்புக் கூறுகளுக்கே முரணாகவும் – பகுத்தறிவுக்கு ஒவ்வாதனவாகவும் – இயங்குநெறிக்குப் பயன்படாதனவாகவும் – தம் ஆய்வு நெஞ்சால் தெளிந்த பின்னீடே – அவை அவரால் தகர்த்தெறியப்பட்டுள! அவை யாவும் தகர்த்தெறியத் தக்கனவே!

நூற்கருத்துகளினுள்ளாக ஒளிறும் வயிரக்கீற்றுகளை வளப்பமாகப் புறப்படுத்திக்காட்டும் நோக்கொடு அமர்ந்து தொடங்க முற்படுகையில் – இன்றியமையாது, முதற்கண்ணாக உரைத்தாக வேண்டிய சில கருத்து விளக்கத் தேவையை நிறைவுசெய்யவே, நூற்கருத்து நுண்மைகளைச் சுட்டவும் விளக்கவும் வாய்ப்பிலாது வழிதிறம்ப நேர்ந்தது!

ஔவையாரின் நானூலும் (நால் + நூல்) – வீரராமனின் நறுந்தொகையும் – சிவப்பிரகாசரின் நன்னெறியும் – உலகநாதரின் உலகநீதியும் தொகையாக ஒன்றியிருக்கும் ஏழுடன் – பாவேந்தரின் ஆத்திசூடியும் இளையோர் ஆத்திசூடியும் சேரி, எண்ணிக்கையில் தொண்டாகி நிற்கின்றன! (தொண்டு = ஒன்பது)

இத் தொகை நூல்கள் தொண்டுடன் – வேர்வினைத் தொண்டனாகிய (இவ்விடத்தே தொண்டு என்பது, தோண்டுந் தொழிலையே குறிக்கும்! முதற்கண்ணாகத் தொண்டு என்பது, உழவுத்தொழிலைக் குறித்து நின்றசொல் எனும் வரலாற்றுஉண்மையை உணர்தல் வேண்டும்!) என்னின் "அருஞ்சுவடியும்" சேர்ந்து பத்தாகப் பற்றியுளது!

பாரதியார் இயற்றிய புதிய ஆத்திசூடி இத் தொகுப்பில் இணைக்கப்பெறாது தவிர்த்திருத்தலைப் பற்றியும் – பொதுமையறச் சமன்மை பேசும் மெதுமையர் சில்லோரிடமிருந்து கேள்வி எழக்கூடும்!

கேள்வியெழுப்பும் கேணைப்பயல்கள் – யாவரும் வாருங்கள்! புதிய ஆத்திசூடியுள் புகுந்து புல்லரிப்புறுங்கள்!... பறக்கும் பதர்களைப் பாருங்கள்!... சௌரியம் தவறேல் (36) – மௌட்டியம் தனைக்கொல் (85) – யௌவனம் காத்தல் செய் (88) – ரஸத்திலே தேர்ச்சி கொள் (89) – ராஜஸம் பயில் (90) – ரீதி தவறேல் (91) – ருசி பல வென்றுணர் (92) – ரூபம் செம்மை செய் (93) – ரேகையில்

களிகொள் (94) ரோதனம் தவிர் (95) ரௌத்திரம் பழகு (96) – லவம்பல வெள்ளமாம் (97) – லாகவம் பயில் (98) – லீலை இவ்வுலகு (99) – லுத்தரை இகழ் (100) – லோகநூல் கற்றுணர் (101) லௌகிகம் ஆற்று (102)...

ஓரிரு அரிசி உள்கிடக்கின்றனவென, அவை கிடக்கலாகும் உமியுருண்டையைப் பிசைந்து துருத்துக்கொள்ள யாமும் – எமரும் என்ன?... விலங்குகளா?!.... (எமரும் = எம்மவரும்)

திருவள்ளுவர்பெருமான் ஓரிடத்தில் ஒருவகைப்பட்டானை நோக்கியோங்கி கடுங்குத்து ஒன்றனைச் செருகலாக உள்நுழைத்திறுக்குவார்!... அது, இது! "ஏமுற்றவரினும் ஏழை" எனும் தொடர், அது! (குறள்: 873) வள்ளுவக் குத்தீட்டுத் துளைப்பாட்சி, அது! அவ் வள்ளுவ இலக்கணத்துக்குத் தக்க பொருத்தப் பொருட்டனாகவே – பாரதி இதன் வழி என்முன் கண்பட்டான்! அவனை இத் தொகுப்பினுள் பிணிக்க, எங்களுக்கு என்ன மனக்கோளாறா?...

ஐம்பானாண்டுகளாகச் சிலையாக்க – நுண்திறக்கலைப் பணியுள் ஊறி உச்சம்பெற்றிருக்கும் சிலைஞனாகிய (சிற்பி) எனக்கு– குழவி (< குழைவி) கொண்டரைத்தற்குப் பயன்பெறும் அடிக்கல்லாகிய அம்மிக்கல் பொளிய உளி தூக்க வேண்டியதாயிற்று!

சிலையாக்கப் பொளிப்புத் திறவினையினும்– அம்மி கொத்துவது என்பது, ஓர் அருஞ்செயலாகும் என்பதையும் வினைபடுகையில் உணர நேர்ந்தது! காலத்தையும் கணக்க உரைத்துத் தேய்க்கும் பணியிது!

எப்படியோ,.... கொத்தி முடித்துவிட்டேன்!

உரைப்பரைப்புக்கேற்ற ஏந்தமைவாக – அம்மி பொளிப்பு அமைந்து முடிவெய்தியது!

இதன் பொளிப்பு நேர்த்தியை உணர்வுமேம்பாட்டுஅறிவர்– கண்டுவந்து பயன் கொள்ளுவர் என்பதையும் நான் நம்புகின்றேன்!

இவ்வறநூற்கொத்து இங்ஙனம் உருவெய்தி நிறைந்துள்ளமைக்குப் பாரிய உழைப்பெடுத்த அணியினருள் – ஐயா செழியன் அவர்கள், முதலவர்! அடுத்தோர்– படித்தடித்த கணிஞர் இருவராகுவர் – அன்னோர், கணிஞர் நா. சேகரும் – கணிஞர் நா.கமலச்செல்வனும் ஆகுவர். துணைஞராயிருந்துதவிய திரு. அரசக்குமரனையும் யாம் மறத்திற்கியலாது! அறிவியலறிஞர் தாமரையாரும் ஓரிரு முறைகளில் ஓடிவந்துதவினார்! முகப்பட்டைப் பொலிவுக்கு மூலத்திறவர் தோழர் அ.தே.தெள்ளியன்! அனைவர்க்கும் அருளியின் அன்பினிக்கும் நன்றிகள்!..

செந்தமிழ்ச் செம்மல் ம. தமிழ்ச்செல்வன்– மருத்துவத் திருமகள் இரா. அபிராமி என்னும் பெயரிய எம் குடும்பச்செல்வங்கள் ஓர்மையராய் ஒருங்கிணைவுறும் திருமணமங்கலநிகழ்வில் (31.10.2025 வெள்ளி) ஆகிய செழுமணமலர்கள் இருவரையும் நெஞ்சினிக்க வாழ்த்தவந்துள்ள நண்போர்க்கும் – உற்றார் உறவார்க்கும்– சுற்றவராகச் சூழ்ந்தார்க்கும் நெஞ்சம் நிறைந்து தந்து மகிழும் அரும் பரிசிற்பொருள், இது! அறவாழ்வுக்கான நெறி, விளக்கு! இதனை வழங்குவதில் திருமணத்திருவீட்டாரும் நிறைவார்கின்றனர்!

**இப் பத்தறத் தொகையோ, பரும்பயன் பாரியது!**

**பற்றிப் பயன்பெறுக!**

**பத்தறத் தொகைக்கொரு– முத்திரை முன்னுரையிது!**

இன்னவாறு,

**பேராசிரியர் அருளியார்**

## உங்கள் எல்லோருக்கும் மூளை இருக்கிறதா?!...

"முய்" என்பது. ஓர் எழுச்சிக் கருத்து வேர்! தொடங்குதல், மேம்பட்டு எழுதல், வெளிப்பட்டுத் தோன்றுதல், முளைத்தல் என்றவாறெல்லாம், அவ்வேர் கருத்துப் பொருண்மை விளர்ந்து தெளிவுநிலை கொண்ட விரிவுகளாகிச் சொற்பயன்பாட்டுள் விளைவு கொழித்தன! இவ் வரலாறு பரும் பாரியது!

முய்>முய்ல்> முல் – என, அவ் வேர் ஊட்டம் செறிந்து கிழங்கு ஆகியது! வேர்தான் கிழங்கு ஆகும் என்பதை. இவ்விடத்தில் நாம் தெளிய உளங்கொளல் வேண்டும்!

முய் > முய்ல் > முல்   முல் + ஐ > முலை = (ஈன்றெடுத்த) மகவுக்குப் பால் தருதற்கெனப் பெண் மார்பில் முளைத்தெழுவதாகிப் பயன் தரும் ஊன் திரட்சி! பயம் தான் பயன்! (பயம் என்பது தமிழ் ஆக்க வரலாற்றுள், "பால்" எனும் பொருளது) (காண்க: பய–நிரை பால் தரும் கறவைக் கூட்டம் – அகம்: 54:9. 155:7.309:2–: 92:6)

பயம்=பால்   பயச்சி > பாய்ச்சி > பாச்சி. நினைவுக்கு வருகிறதா?பாச்சி சோச்சி!... (ஐந்தாண்டுகளுக்கும் மேலாக, என் தாய் பார்வதியிடம் (பாய்ச்சி) பாச்சி குடித்தவன், நான்!....)

முல் > முலை. இது, கிரேக்கம் வழி இலத்தீனத்தில். "mulgere" எனும் வினைவடிவச் சொல்லாகிப் பின் mulk எனத் திரிந்து– அதற்கும் பின்னாக "milk" என நின்றது! ஆரஆர வாய் நிரம்பக் குடித்துக் கொண்டிருக்கிறோம், நாம்! "Milch Cow" என்பது, பால் கறக்கும் "ஆ. கறவை (= பசுமாடு) அச்சொல் உள்ளும் நம் "முலை" கிடக்கிறது! முலை: > (Germanic) melg எனப் படிந்து meluks எனும் வடிவில் திரண்டு, "milch" எனத் திரிந்துள்ளது! தச்சு தேனிசு (Dutch– Danish) போன்ற மேலை மொழிகளிலெல்லாம் இம் முலை melk என்றே பதிவெய்தியுள்ளது! Emulsion (=பால்மம்), promulgate என்றவாறான சொற்களிலுங்கூட இம் முலை பறிப்புளது! தமிழுள் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பதிவிடங்களில், இம் முலை முளைத்துக் கிடக்கின்றது!

முய்> முய்ல்> முல்>முள்   முள் + ஐ > முளை = வித்தினின்று மேலாகி எழுந்து வெளிப்படுவது. (to sprout as shoots; to germinate) (காலை ஞாயிறு கதிர்விரித்து முளைப்பு – மணிமேகலை: 8:18) முளைத்தல்=எழுந்து தோன்றுதல் (to rise)

முள்>மூள்>மூளு ஊக்கவெழுச்சியுடன்முற்படு "முதறை முடிக்க மூண்டான்" (கம்பரா. மாயாசி, 96) மூளுதல்–சினங்கிளம்புதல், மூண்டெழுதல், எரிதல். அகைதல் (கருதுக: அகையெரி)

முளை >மூளை = கருத்தெழும் இடம், பொருள் தோன்றுமிடம் (பொருள் = கருப்பொருள்) – = (பொருண்மைப் பாட்டிடம்)

தொன்றுதொட்டு, மிகப் பல்லாயிரம் ஆண்டுகட்கும் முன்னீடிருந்தே வழங்கி வரலாகும் தகைமை சான்ற இம் முளைக்கு உரிய பெயராகிய "மூளை" என்பது, பத்துப்பாட்டு எட்டுத்தொகை பதினெண் கீழ்க்கணக்கு எனக் கிடைத்துள்ள எவற்றினுள்ளும்– ஓரிடத்தேனும் பதிவுற்றிலதே, அது ஏன்?

கி.பி. 776–இல் திருமங்கையாழ்வார் இயற்றிய பெரிய திருமொழியினுள் (தெய்வியப் பனுவல்) "மூளையார் சிரத்து" (4:2:8) என்றவாறாகத் தலைத் தொடக்கப்பதிவுற்றுள்ளது! மூளையானது, "சிரம்" எனும் தலையினுள் உள்ளதென்பதூஉம் இதனுள் தலைப்பட்டுள்ளது!

கி.பி. 776–க்கும் முன்னீடாகத் தமிழனுக்கு மூளை என்பதே, இல்லையா? தமிழுக்குள்ளே அதற்கு முன்பு மூளையையே காணோமே!

அது அப்படியாகப் பதிவெய்தியில்லையே!..ஏன்?!...

உரிய தீர்வு தெரிய இப் பொழிவு இயலவுள்ள அரங்குக்கு உரிய நாளில் குறித்த உரிய நேரத்தில் முந்தி வந்து ஆர அமரப் பொருந்தித் தெரியவேண்டுவதை அறிய வருக!.. 'மூளை' என்பது எது என, உங்கள் மூளைக்குப் பட வேண்டுமா?– வேண்டாவா? வேண்டுமெனில் வந்து சேர. –ஆர வேண்டுகிறேன்!

**– பேராசிரியர் அருளியார்**

# அடிப்படைக் கலைச்சொற் பட்டியல் – 4

*activity* — செயற்பாடு

*adapter, adaptor* — 1. இணக்கி 2. தகையப் பொருத்தி (ஒவ்வுமை இல்லா அல்லது இணக்கமில்லா இரண்டு முறைமைகளோ உறுப்புகளோ ஒன்றாகச் சேர்ந்து தகையச் செயற்படச் செய்யும் கருவி அல்லது மென்பொருள் உறுப்பு)

*adapter card* — இணக்கி மின்னட்டை, இணக்கியட்டை

*A/D converter (ADC)* — (காண்க: *Analog to digital converter*)

*adding circuit* — கூட்டல் மின்சுற்று

*add-on, extension* — 1.சேர்த்தல் (கூடுதல் கூறுகள்; திறமைக்காக அயலாரின் நிரல்(அ)நிரல்மொழியை நிரலில் சேர்த்தல்)
2.'கணி'யின் திறத்தை (அ) செயற்பாட்டை உயர்த்தச் சேர்க்கப்படும் வன்பொருள். (எ–டு: கூடுதல் முதன்மைநினைவகம், புதுநடுவண் செயலாக்க ஒருமம், விரைவாகச்செயற்படும் காணொலி அட்டை) 3. விரிவு.

*address bus, data bus* — 1. 'கணி'யுடன் இணைக்கப்பட்ட கணி உறுப்புகளுக்கும் கருவிகளுக்கும் இடையிலான எண்மப்பாதை. 2. நடுவண் செயலாக்கிக்கும், – முறைமை (அ) கட்டக நினைவகத்திற்கும் தாய்ப்பலகைவழி தரவு

செலுத்தும் பாதை. 3.செயலாக்கப்படும் தரவின் முதன்மை நினைவக இருப்பிடத்திற்குச் செலுத்தும் உள் அலைத்தடம்.

*address register* — முகவரிப்பதிவகம்

*address space* — முகவரிக்களம்

*adds, additions* — கூடுதல்கள், சேர்க்கைகள்

*Adjacent channel Interferrance* — அண்மை அலைத்தடக் குறுக்கீடு

*administrator* — மேலாண்மையர், ஆளுறுப்பு

*admittance* — பாய்விசைவு. (மின்சுற்று (அ) கருவியில் எவ்வளவு எளிதில் மின்னோட்டம் பாய்கிறதென்ற அளவீடு)

*Advanced Power Management (APM)* — மேம்பட்ட மின்திற மேலாண்மை

*Advanced Technology Attachment (ATA)* — மேம்பட்ட நுட்பியல் தொடுப்பு (வன்வட்டு முதலிய சேமிப்பகங்களைக் 'கணி'யுடன் இணைக்கும் இடைமுகம்)

*adware* — விளம்பர மென்பொருள் (தீ நிரலின் (malware) ஒரு குறிப்பிட்ட வகை)

> *பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்*
> *அருமை உடைய செயல்.*
>
> திருக்குறள் : 975

**பெருமைமிகு தினமணி இதழின் அருமைமிகு கட்டுரை :**
**"பிறமொழிக் கலப்பின்றிப் பேசுவோம்!"**
**நன்றி பாராட்டுவோம்! நடைமுறையில் பின்பற்றுவோம்!**

*மதிப்புயர் தினமணி ஆசிரியர் அவர்களுக்கு,*
*ஐயா, வணக்கம்.*

*"தினமணி" இதழின் 30/09/2025 நாளிட்ட நடுப்பக்கக் கட்டுரையில், "பிறமொழிக் கலப்பின்றிப் பேசுவோம்" என்ற அருமையான தலைப்பினை எழுதியிருந்த, சுற்றுச்சூழல் ஆர்வலர் முனைவர் இரா. கற்பகம் அவர்களுக்கு எங்களுடைய நன்றியையும் பாராட்டினையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம். இக் கட்டுரையினை வெளியிட்ட தினமணி இதழுக்கும் அதன் ஆசிரியருக்கும் எங்களின் நனி நன்றி!*

*"ஓர் இனத்தை அழிக்க வேண்டுமாயின், அவ்வினத்தினுடைய மொழியை அழிக்க வேண்டும்!" என்பது மேலையறிஞர் கூற்று.*

*நம் தமிழ்மொழி ஏறத்தாழ இருபத்தேழு பிறமொழிகளின் கலப்பினால் தாக்குற்று நலிந்த நிலை கண்டு, தனித்தமிழ்த்தந்தை மறைமலை அடிகளார் அவர்களின் சீரிய முயற்சியில் தொடங்கித் தூயதமிழ் இயக்கம் வேர் விட்டுக் காலூன்றி அடி பதித்து நன்றே செழித்து வளர்ந்தது. பாவாணர், பாவேந்தர், பாவலரேறு போலும் அரும்பெருந் தமிழறிஞர்களின் தொடர் முயற்சியிலும், பேருழைப்பிலும் தனித்தமிழ் இயக்கம், செம்மாப்புடன் வீறுநடை போட்டு வருகின்றது!*

*"ஈசுவரன் கிருபையால் சகல பந்துக்களும் சேமம்" என்பது, இன்று "இறைவன் அருளால் அனைத்து உறவினரும் நலம்" என்றாகியுள்ளது இது ஒரு காட்டே!*

*கட்டுரையாசிரியர் மிக விளக்கமாகவும், விரிவாகவும், தூயதமிழின் தேவையும் அதன் இன்றியமையாமையையும், மிகத் தெளிவாக எடுத்துரைத்துள்ளார். அவருக்கு நம்முடைய நெஞ்சார்ந்த நன்றி.*

*செந்தமிழில் சொற்களுக்குப் பஞ்சமில்லை. கலைச்சொற்களுக்கும் குறைவில்லை.*

*தமிழ்ப் பல்கலைக்கழகத்தின், தூயதமிழ் – கலைச் சொல்லாக்க அகரமுதலிகள் துறையின் தலைவராக 25 ஆண்டுகள் அரும்பணியாற்றிய பேராசிரியர் அருளியார் அவர்களின்*

பேருழைப்பில் விளைந்த "அருங்கலைச் சொல் அகரமுதலி" ( ஆண்டு 2002 : 1216 பக்கங்கள், 135 கலை– அறிவியல் துறைகளுக்கு ஏறத்தாழ 1,30,000 அருங்கலைச் சொற்கள்) ,"இவை தமிழல்ல" எனும் "அயற்சொல் அகராதி" ( மூன்று பதிப்புகள் : 1983, 1992, 2007 : 4 தொகுதிகள் – 1000 பக்கங்களுக்கு மேலாக ) இவை தூயதமிழின் பயன்பாட்டு வெற்றிக்குச் சான்றாக நிற்கின்றன!

"எங்கும் தமிழ்! எதிலும் தமிழ்!" என்பது வெற்று முழக்கமாக இல்லாமல், உயிரியல் சார் வாழ்வியக்கமாக அமைவது ஒன்றே, தமிழ்க்கும்,தமிழ்நாட்டின் மக்களுக்கும் பெருமையையும், மேலும் சிறப்பையும் தரும் என்பது திண்ணம்.

தமிழென ஒன்றும் தனித்தமிழ் என்றும் தான் இரு மொழியில்லை. தமிழது தானே தனித்தமிழாகும், தவிர்த்திடின் பிற சொல்லை." என்ற பாவாணரின் அரு வரிகளுக்கு ஏற்ப நாம் அனைவரும் பிறமொழிக் கலப்பின்றிப் பேசுவோம்! எழுதுவோம்! பயில்வோம்! பயிற்றுவிப்போம்! தமிழைத் தமிழ்நாட்டின் ஆட்சிமொழியாக, அலுவல் மொழியாக, கல்வி மொழியாக, வழிபாட்டு மொழியாக, வாழ்வியல் மொழியாக ஆக்குவோம். வாழ்வோம்! வாழ்விப்போம்!

**(நற்றமிழ் இதழ்க்காக – இறை.செழியன்.)**

## நற்றமிழ்க் கட்டணவிளக்கம்

| | | |
|---|---|---|
| தனி இதழ் | உரு. | 20.00 |
| ஆண்டுக்கட்டணம் | உரு. | 240.00 |
| ஐந்தாண்டுக்கட்டணம் | உரு. | 1000.00 |
| வாணாள் கட்டணம் | உரு. | 2500.00 |

(UPI - Unified Payments Interface)

ஒ.செ.ப. ஒருங்கிணை செலுத்தல் பரிமாற்றம்:

பேசி எண் : **89 39 84 59 01 (S. Sejiyane)**

பணவிடை செலுத்தவிழைவோர்

இதழ் முகவரிக்கு அனுப்புக!

# நூல் அறிமுகம்

*நூல்: எண்ணப் பூச்சரம்*

*ஆசிரியர்: புலவர் ந.ஞானசேகரன்.*

*வெளியீடு: சோலைப்பதிப்பகம், இரண்டாம் முதன்மைச்சாலை, பெரம்பூர், சென்னை– 600 011. கைப்பேசி: 98405 27782.*

*புலவர் ந.ஞானசேகரன் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியிலும், இடைநிலைப் பள்ளிகளிலும் தலைமை ஆசிரியராக இருந்து பணிநிறைவு செய்தவர். பழைய இதழ்களான காஞ்சி, சுரதா இதழ்களிலும் இப்போதும் வெளிவரும் முகம், எழுகதிர், தெளிதமிழ் முதலிய இதழ்களிலும் பாடல்கள் எழுதி வருபவர். அறிவுத்தொகையன், அறிவுக்கரசன் என்னும் புனைபெயர்களிலும் எழுதிவருகின்றார்.*

*நூலாசிரியர் பண்பார்ந்த பகுத்தறிவுப்பாவலர் என்று அணிந்துரையில் முனைவர் கடவூர் மணிமாறன் அறிமுகப்படுத்துகின்றார். நூலில் எழுபத்தியிரண்டு பாடல்கள் இடம்பெற்றுள்ளன. பாடல்கள் எண்சீர் மண்டிலங்களால் ஆனவை. தமிழ்மொழி, இனம், அன்பு, அறம் காக்கவும், உழைப்பால் உயரவும், காலத்தின் அருமை கருதவும், தன்மானத்தோடு வாழவும் வலியுறுத்து கின்றன. வள்ளுவர் காட்டும் வழியில் வாழ்வு நடத்தவும், பெற்றோரைப் பேணவும், வாழ்க்கைத் துணை மனம் மகிழ வாழ்ந்திடவும் கூறுகின்றன.*

*"பீடுறவே நாடினத்து மொழிக்கே வாழு'*
*'இறப்பதற்குள் நற்பெயரும் புகழும் தேடு" – என்கின்றார்,.*

*தமிழ்நாடு வந்தாரை வாழவைத்து ஏமாந்த நாடு என விளக்குகின்றார்.*

*"நலங்கொழிக்கும் தமிழ்நாடு வந்தோர்க் கெல்லாம்*
*நல்வரவு நவின்றேஏ மாந்த நாடு" – எனப்பாடுகின்றார்.*

காந்தி போல வாழ வேண்டுமென்று வழிகாட்டுகின்றார்.

*"விடாமுயற்சி துணிவுடனே எதையும் செய்தே*

*விடுதலையைத் தந்த காந்தி போல வாழ்க!"* – என்று கூறுகின்றார்.

*"செய்கின்ற பொதுநலத்தால் பெயரைத் தேடு*

*செக்கிழுத்த செம்மலையே எண்ணிப்பார்ப்பாய்!"* – என்று நெறிப்படுத்துகின்றார்.

புலவர் ஐயா அயற்சொற்களை விலக்கி எழுதினால், அவருடைய பாக்கள் செழுமையும் சிறப்பும் பெறும். தமிழுக்கும் காப்பாக அமையும். நல்லவற்றைக் கூறும் "எண்ணப் பூச்சரம்" நூலாசிரியர் புலவர் ஐயாவை நற்றமிழ் பாராட்டி வாழ்த்துகின்றது.

---

## நான் என்ன சாதி?

– பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

*மாந்தன் படிநிலை வளர்ச்சிக் காலந்தொட்டு, "சாதியுடனேயே இறைவனால் படைக்கப் பெற்றிருக்கின்றான்" என்று பார்ப்பனர் சொல்லும் வருணாசிரம தர்மத்தைக் கடைப்பிடிப்பதில் அவர்க்கு அத்துணை அழுத்தமான நம்பிக்கை! ஆனால் புறத்தே பார்ப்பனீயத்தைச் சாடுகின்ற கொள்கையை உடையவர், அவர்! அறிவியலும் படித்தவர். என்ன செய்வது? அறிவியல் வளர்ந்திருப்பது எல்லாம் வெறும் கருவி அளவில் தானே! மனஅளவை அதால் மாற்றிவிட முடியுமா, என்ன?*

*பகுத்தறிவு, பொதுமை, தமிழ், தமிழினம், மண்ணாங்கட்டி என்று பேசுவதெல்லாம் வெறும் கவர்ச்சிக்காகவும் காசுக்காகவும் என்றுதானே பலர் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்! சாதியைக் கேட்டுத்தானே அறிவையும் கருத்தையும் கொள்கையையும் மதிப்பிடுகிறார்கள்! இந்தத் தமிழினம் என்றைக்குத்தான் உருப்படுமோ? இத்தகைய சாதிப் பேய்களும் வெறியர்களும் உள்ளவரை அஃது எங்கே உருப்படப் போகிறது!*

(நன்றி : பாவலரேறு பெருஞ்சித்திரனார் எழுத்தடைவுகள் தொகுதி 14 பக்கம் 117)

## தொல்காப்பியத்தில் இடைச்செருகல்!

பண்டைத் தமிழ்மக்களின் மொழி இலக்கணமாகவும் வாழ்வியல் வரலாறாகவும் இன்றளவும் இருந்து வரும் ஒப்பற்ற நூல் தொல்காப்பியம் ஆகும்.

அதன் மூன்றாவது அதிகாரமாகிய பொருளதிகாரத்தின் ஒன்பதாம் இயலாக இருப்பது மரபியல். அவ்வியலில் அந்தணர்க் குரியனவாக கூறப்பட்டுள்ள சிறப்பு விதிகள் 71 முதல் 85 வரை உள்ள 15 நூற்பாக்களை இடைச்செருகலாகத் தமிழ்ப் புலவர்களும் அறிஞர்களும் கருதுகின்றனர். இந்நூற்பாக்கள் காலத்தால் பிற்பட்ட மனு(அ)தர்மத்தின் வருணச் சார்புடையவை ஆகும்.

அன்புடன், புலவர் சி. பெருந்தேவன்

---

## துலங்குதமிழ்ப் பாடிடுவோம்!

***உலகத்தின் மொழியென்று ஆங்கிலத்தை ஏற்றோம்!***
***உயிருணர்வு மொழித்தமிழை உறுமுதன்மை என்றோம்!***
***பல மொழிகள் கற்பதனால் பிறிதென்ன கண்டோம்?***
***பன்னூறு பாட்டிற்கு அடிதெரிந்தோம்! ஆனால் நலங்கூறும்***
***ஒருபாட்டின் உருத்தெரிந்தா போனும்?***
***நல்லிணக்க ணம்நயவா இந்தியைத் தள்ளி***
***துலங்குதமிழ்ப் பாடிடுவோம்! அறிவியலை ஆக்கத்***
***துணைநிற்கும் ஆங்கிலத்தைப் பாவாணர் ஏற்றார்!***

**– பாவலர் இரா. வேலாயுதம், புதுச்சேரி**

**நற்றமிழ் இதழ்க்குப் புரப்புக்கட்டணம் வழங்கியோர்:**

| எண் | திருவாளர்கள் | உருவா |
|---|---|---|
| 1. | தமிழ்த்திரு. கோ. மு. தமிழ்ச்செல்வன், புதுவை | 5000 |
| 2. | தமிழ்த்திரு. பொறிஞர் அ. கணியன், புதுவை | 2500 |
| 3. | தமிழ்த்திரு. முனைவர் அ. இராமதாசு, புதுவை | 1000 |
| 4. | தமிழ்த்திரு. மருத்துவர் மு. உத்திராபதி, புதுவை | 500 |
| 5. | தமிழ்த்திரு. இர. அரசு–விலாசினி இணையர்,புதுவை | 500 |
| 6. | தமிழ்த்திரு. மு. முத்துக்கண்ணு, புதுவை | 500 |
| 7. | தமிழ்த்திரு. பூம்புகார்நிலவன், சென்னை | 240 |

**புரப்புக்கட்டணம் வழங்கிய நற்றமிழ் அன்புள்ளங்களுக்கு நன்றி!**

## கலை இலக்கியப் பெருமன்றத்தின் தலைமகன் கலைமாமணி தோழர் மு.கு. இராமன் மறைந்தார்



கலைமாமணி, பாவலர், கலை இலக்கியப் பெருமன்றத்தின் சிறப்புத் தலைவர் திரு. **மு.கு. இராமன்** அவர்கள் 06.11.2025 அன்று இயற்கையெய்தினார்.

விடுதலைப் போராட்டங்களில் கலந்துகொண்ட அவர் அரசியலில் தொடக்கக்காலம் முதலாகப் பொதுவுடமை இயக்கத்தில் ஈடுபட்டுத் தம் 70 அகவை வரை பல பொறுப்புகளை ஏற்றுச் செயற்பட்டுவந்தார்.

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தில் பொருளாளராக இருந்து செயற்பட்டதோடல்லாமல் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தைப் புதுச்சேரியிலும் தொடங்கி, அதன் சிறப்புத் தலைவராகத் திகழ்ந்தார்.

*"திருக்குறள் கற்றுத் தெளிவுறுவோம்*
*திருவள்ளுவர் நெறிப்படி வாழ்ந்திடுவோம்*
*நல்ல கலை வளர்ப்போம் நானிலம் சிறப்புறவே*
*மக்கள் கலை வளர்ப்போம் மானிடம் வென்றிடுமே."*

**பாவலர் மு. கு. இராமன்**

**அன்னாரின் மறைவிற்கு, "நற்றமிழ்" ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றது.**